147859

Q23:382113Ta
N14
147859

உ

திருச்சிற்றம்பலம்.

# திருத்தேங்கூர் தலபுராணம்.

[illegible] 1-[illegible] 1915 MA[illegible]

திருத்தேங்கூர்

மகா-ள-ள-ஸ்ரீ கனகராஜமுதலியாரவர்கள்

வேண்டுகோளின்படி

தருமபுரவாதீனத்து

வித்வான் ஸ்ரீமத் சண்முகச்சுவாமியவர்களால்

பரிசோதிக்கப்பட்டு

சீகாழி

திரிபுரசுந்தரி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை அணா, 4.

ஆனந்த வருஷம் கார்த்திகைமீ.

1914.

O23:38 2113 T
N14
167859

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# திருத்தேங்கூர் தலபுராணம்.

இப்புராணம் இயற்றினோரின்னாரென்பது விளங்கவில்லை.

---

திருத்தேங்கூர்

மகா-ா-ா-ஸ்ரீ கனகராஜமுதலியாரவர்கள்

வேண்டுகோளின்படி

தருமபுராவாதீனத்து அடியார் குழாங்களிலொருவரான

வித்வான் ஸ்ரீமத் சண்முகச்சுவாமியவர்களால்

பரிசோதிக்கப்பட்டு

---

சீகாழி

திரிபுரசுந்தரி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

---

இதன் விலை அணா, 4.

ஆனந்த௵ கார்த்திகைமீ.

503
294.55
8
142859

உ

# அட்டவணை.

| சருக்கங்கள். | பக்கம். | பாட்டின் தொகை. |
|---|---|---|
| கடவுள்வாழ்த்து | 1 | 12 |
| அவையடக்கம் | 3 | 3 |
| புராணவரலாறு | 5 | 20 |
| தலவிசேடச்சருக்கம் | 8 | 20 |
| வெள்ளிமலைச்சருக்கம் | 10 | 38 |
| சுக்கிரபகவான்பூஜைசெய்சருக்கம் | 16 | 28 |
| அரிந்தமன்சருக்கம் | 20 | 62 |
| சிவகங்கைச்சருக்கம் | 29 | 18 |
| | ஆ | 201 |

உ

இப்புத்தகம் வேண்டுவோர் திருத்தேங்கூர் மகா-ா-ாஸ்ரீ கனகராஜமுதலியார் அவர்களிடத்திலும், கும்பகோணம் சப்ரிஜிஸ்டராபீஸ்கிளர்க்கு மகா-ா-ா-ஸ்ரீ டி. சாமிநாதமுதலியார் அவர்களிடத்திலும், சீகாழி தாலுக்கா அரசூரிலிருக்கும் மகா-ா-ா-ஸ்ரீ இராஜப்ப முதலியாரவர்களிடத்திலும், பெற்றுக்கொள்ளலாம்.

இதன்விலை அணா 4. தபால்சார்சுவேறு.

உ

# பிழை திருத்தம்.

| பக்கம். | பாட்டு. | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| 2 | 4 | 1 | போம் | போய் |
| ஷை | 6 | 2 | குறித்து | குறித்துச் |
| 5 | 1 | 3 | ணீஙகி | ணீங்கி |
| ஷை | 3 | 3 | நீர்ப்பூ | நீர்ப்பூப் |
| ஷை | ஷை | ஷை. | மந்த | மந்தச் |
| ஷை | ஷை | 4 | சித்தளி | சித்தளித் |
| ஷை | 4 | 1 | பாங்கர் | பாங்கர்ச் |
| ஷை | ஷை | 2 | வைக | வைகக் |
| ஷை | 5 | 3 | ருத்தி | ருத்திக் |
| 8 | 3 | 1 | தேமா | தேமாத் |
| 9 | 8 | 1 | மன்றி | மன்றிப் |
| ஷை | 10 | 3 | தேங்கி | தேங்கிப் |
| 10 | 16 | 3 | ஆறின் | ஆறிற் |
| ஷை | 19 | 1 | கூற | கூறச் |
| 14 | 29 | 2 | மூர்த்தியை | மூர்த்தியைப் |
| 17 | 9 | 1 | தலாவை | தலாவைச் |
| 18 | 13 | 2 | நன்னீர் | நன்னீர்ப் |
| ஷை | 15 | 1 | காணின் | காணிற் |
| 19 | 25 | 2 | மில்லை | மில்லைப் |
| 20 | 27 | 2 | மெய்ப்புளகம் | மெய்புளகம் |
| 21 | 6 | 1 | தன்னுழை | தன்னுழைச் |
| 23 | 18 | 2 | கோட்கள் | கோள்கள் |
| 24 | 30 | 3 | யொன்று | யொன்று |
| ஷை | ஷை | ஷை | கேள்பதி | கேள்பதி |
| 28 | 54 | 3 | வள்வார் | வள்வார்ச் |
| 36 | ,, | 14 | சூடி | சூடிச் |
| 41 | ,, | 3 | கீறி | கீறிச் |
| 42 | ,, | 13 | வரன்கள் | வரங்கள் |
| 43 | ,, | 7 | சாற்றி | சாத்தி |
| ஷை | ,, | 21 | பெயரை | பெயரைத் |
| 48 | ,, | 6 | வரன்கள் | வரங்கள் |
| 49 | ,, | 6 | வரன்கள் | வரங்கள் |

## திருத்தேங்கூர்

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் பியந்தைக் காந்தாரம் (இரண்டாம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்.

புரைசெய் வல்வினை தீர்க்கும் புண்ணியர் விண்ணவர் போற்றக்
கரைசெய் மால்கட னஞ்சை யுண்டவர் கருதலர் புரங்க
ளிரைசெய் தாரழ லூட்டி யுழல்பவ ரிடுபலிக் கெழில்சேர்
விரைசெய் பூம்பொழிற் றேங்கூர் வெள்ளியங் குன்றமர்ந் தாரே (1)

சித்தந் தன்னடி நினைவார் செடிபடு கொடுவினை தீர்க்குங்
கொத்தின் றாழ்சடை முடிமேற் கோளெயிற் றரவொடு பிறையன்
பத்தர் தாம்பணிந் தேத்தும் பரம்பரன் பைம்புனல் பதித்த
வித்தன் றாழ்பொழிற் றேங்கூர் வெள்ளியங் குன்றமர்ந் தாரே. (2)

அடையும் வல்வினை யகல வருள்பவ ரனலுடை மழுவாட்
படையர் பாய்புலித் தோலர் பைம்புனற் கொன்றையர் படர்புன்
சடையில் வெண்பிறை சூடித் தார்மணி யணிதரு தறுகண்
விடையர் வீங்கெழிற் றேங்கூர் வெள்ளியங் குன்றமர்ந் தாரே. (3)

பண்டு நான்செய்த வினைகள் பறையவோர் நெறியருள் பயப்பார்
கொண்டல் வான்மதி சூடிக் குரைகடல் விடமணி கண்டர்
வண்டு மாமல ரூதி மதுவுண விதழ்மறி வெய்தி
விண்ட வார்பொழிற் றேங்கூர் வெள்ளியங் குன்றமர்ந் தாரே. (4)

சுழித்த வார்புனற் கங்கை சூடியோர் காலனைக் காலாற்
றெழித்து வானவர் நடுங்கச் செற்றவர் சிறையணி பறவை
கழித்த வெண்டலை யேந்திக் காமன துடல்பொடி யாக
விழித்த வர்திருத் தேங்கூர் வெள்ளியங் குன்றமர்ந் தாரே. (5)

தொல்லை வல்வினை தீர்ப்பார் சுடலைவெண் பொடியணி சுவண்ட
ரெல்லி சூடிநின் றாடு மிறையவ ரிமையவ ரேத்தச்
சில்லை மால்விடை யேறித் திரிபுரந் தீயெழச் செற்ற
வில்லி னார்திருத் தேங்கூர் வெள்ளியங் குன்றமர்ந் தாரே. (6)

நெறிகொள் சிந்தைய ராகிநினைபவர் வினைகெட நின்றார்
முறிகொண் மேனிமுக் கண்ணர் முளைமதி நடுநடுத் திலங்கப்
பொறிகொள் வாளர வணிந்த புண்ணியர் வெண்பொடிப் பூசி
வெறிகொள் பூம்பொழிற் றேங்கூர் வெள்ளியங் குன்றமர்ந் தாரே. (7)

எண்ணி லாவிற லரக்க னெழிறிகழ் மால்வரை யெடுக்கக்
கண்ணெ லாம்பொடிந் தலறக் கால்விர லூன்றிய கருத்தர்
தண்ணு லாம்புனற் கண்ணி தயங்கிய சடைமுடிச் சதுரர்
விண்ணு லாம்பொழிற் றேங்கூர் வெள்ளியங் குன்றமர்ந் தாரே. (8)

தேடித் தானயன் மாலுந் திருமுடி யடியிணை காணார்
பாடத் தான்பல பூதப் படையினர் சுடலையிற் பலகா
லாடத் தான்மிக வல்ல ரருச்சுனற் கருள்செயக் கருதும்
வேடத் தார்திருத் தேங்கூர் வெள்ளியங் குன்றமர்ந் தாரே. (9)

சடங்கொள் சீவரப் போர்வைச் சாக்கியர் சமணர்சொற் றவிர
விடங்கொள் வல்வினை தீர்க்கு மேத்துமி னிருமருப் பொருகைக்
கடங்கொண் மால்களிற் றுரியர் கடல்கடைந் திடக்கனன் றெழுந்த
விடங்கொள் கண்டத்தர் தேங்கூர் வெள்ளியங் குன்றமர்ந் தாரே. (10)

வெந்த நீற்றினர் தேங்கூர் வெள்ளியங் குன்றமர்ந் தாரைக்
கந்த மார்பொழில் சூழ்ந்த காழியுண் ஞானசம் பந்தன்
சந்த மாயின பாடற் றண்டமிழ் பத்தும்வல் லார்மேற்
பந்த மாயின பாவம் பாறுத றேறுதல் பயனே. (11)

திருச்சிற்றம்பலம்.

## சுவாமி திருநாமம் வெள்ளிமலை நாதர்
## தேவி திருநாமம் பெரியநாயகி.

---

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்
## திருக்ஷேத்திரக்கோவை.

பண்-இந்தளம் (இரண்டாம் திருமுறை).

கோயிற்றிறம்.

திருச்சிற்றம்பலம்.

ஆறை வட மாகற லம்ப ரையா
றணியார் பெருவேளூர் விளமர் தேங்கூர்
சேறை துலைபுக லூரக லாதிவை
காதலித் தானவன் சேர் பதியே. (5)

---



## திருநாவுக்கரசுநாயனர்
## திருக்ஷேத்திரக்கோவை.

திருத்தாண்டகம் (ஆறாம் திருமுறை)

கோயிற்றிறம்.

திருச்சிற்றம்பலம்.

தில்லைச்சிற் றம்பலமுஞ் செம்பொன்பள்ளி
தேவன் குடிசிராப் பள்ளி தேங்கூர்
கொல்லிக் குளிரறைப் பள்ளி கோவல்
வீரட்டங் கோகரணங் கோடிகாவு
முல்லைப் புறவ முருகன்பூண்டி
முழையூர் பழையாறை சத்திமுற்றங்
கல்லிற் றிகழ்சீரார் காளத்தியுங்
கைலாய நாதனையே காணலாமே. (1)

---

## சுந்தரமூர்த்திநாயனர்
## ஊர்த்தொகை.

பண்-பழம்பஞ்சுரம் (ஏழாந் திருமுறை).

கோயிற்றிறம்.

திருச்சிற்றம்பலம்.

தாங்கூர் பிணிநின் னடியார்மேல வகல வருளாயே
வேங்கூ ருறைவாய்விளமர் நகராய் விடையார் கொடியானே
நாங்கூ ருறைவாய் தேங்கூர்நகராய் நல்லூர் நம்பானே
பாங்கூர் பலிதேர் பரனேபரமா பழனப் பதியானே. (6)

---

## சுந்தரமூர்த்திநாயனர்
## திருநாட்டுத்தொகை.

பண்-இந்தளம் (ஏழாந் திருமுறை).

திருச்சிற்றம்பலம்.

தேங்கூருந் திருச்சிற்றம்பலஞ் சிராப்பள்ளி
பாங்கூரெங்கள் பிரானுறையுங் கடம்பந்துறை
பூங்கூரும் பரமன் பரஞ்சோதி பயிலுமூர்
நாங்கூர் நாட்டு நாங்கூர் நறையூர் நாட்டு நறையூரே. (4)

## திருவாரூர்

## திருநாவுக்கரசுநாயனார்

திருத்தாண்டகம் (ஆறாந் திருமுறை),

திருச்சிற்றம்பலம்.

கருவாகிக் குழம்பிருந்து கலித்து மூளை
கருநரம்பும் வெள்ளெலும்புஞ் சேர்ந்தொன் றாகி
யுருவாகிப் புறப்பட்டிங் கொருத்தி தன்னால்
வளர்க்கப்பட் டுயிராருங் கடைபோ காரான்
மருவாகி நின்னடியே மறவே னம்மான்
மறித்தொருகாற் பிறப்புண்டேன் மறவாவண்ணந்
திருவாரூர் மணவாளா திருத்தேங்கூரா
செம்பொனே கம்பனே திகைத்திட்டேனே. (6)

---

திருச்சிற்றம்பலம்.

## பெரியபுராணம் (திருத்தொண்டர் புராணம்)

## திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் புராணம்.

நம்பர்மகிழ் திருவாரூர் வணங்கிப் போந்து நலங்கொடிருக்
காறாயி னண்ணி யேத்திப்
பைம்புனன் மென் பணைத்தேவூ ரணைந்து போற்றிப் பரமர்திரு
நெல்லிக்காப் பணிந்து பாடி
யும்பர்பிரான் கைச் சினமும் பரவித் தேங்கூ ரொங்குபுகழ்த்
திருக்கொள்ளிக் காடும் போற்றிச்
செம்பொன்மதிட் கோட்டூரும் வணங்கி யேத்தித் திருமலிவெண்
டுறைதொழுவான் சென்று சேர்ந்தார். (574)

---

பிரளய வெள்ளம் உட்புகுதாது புறத்தே தேங்கிநின்ற காரணத்தால் இத்தலம் தேங்கூராயதென்று இப்புராணங் கூறுதலாலும், தெங்கூரென்றுவரும் பாசுரங்களைத் தேங்கூரென வாசிப்பினும் சந்தவின்பங் கெடாமையாலும், சிலபாசுரங்களில் தேங்கூரென்றே காணப்படுதலாலும், ஏட்டுப்பிரதிகளில் கோடுமேல் சுழித்திருக்கமாட்டா தாகையாலும் தேங்கூரென்றே கொள்ளத்தக்கது.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருத்தேங்கூர் தலபுராணம்.

## கடவுள் வாழ்த்து.

### சிவபெருமான்றுதி.

பெரிய நாயகி பெத்தர்களின்புறப்
புரியு மாரருள் பூண்டவ ளோடுவாழ்
வரனை வெள்ளி மலையுறை வள்ளலைக்
கருணை வாழ்வைக் கருத்து ளிருத்துவாம்.

### விநாயகர் துதி.

1. பருதிபலகோடியெனுமேனியான் றிருத்தேங்கூர்ப் பரன்புராணஞ்
சுருதிதரு வியாதனுயர் மாணாக்கன்சூதனுரை தொகுத்துக் கூறப்
பொருதிரைவா ரிதியருந்திப் புழைக்கையினன் முன்னொருநாட் [பொன்னிபோதத்
தருதியென முனிகரகத் தளித்தகட கரிமுகவன் சரணஞ்சார்வாம்.

### வெள்ளிமலைநாதர் துதி.

2. நிறைகொற்ற மருவியபொன் மலைசிலையாவேந்துபாணிமலைகாணத்
துறையுற்ற நடநவில்வோனுலகமெலாமுய்ந்திடவே துணையாயர்தப்
பிறையுற்ற நுதலியுட னிருப்ப வெழிலார்ந்தென் றும்பிறங்கி ஞான
மறைகிற்குமிடமாய வெள்ளிமலை நாதர்பதமடுத்து வாழ்வாம்.

### பெரியநாயகி துதி.

3. உந்துமெழிற்றிருவுதரத் தண்டகோ டிகள்பலவு முதவிப் பின்னு
மைந்தொழிலு மைவருக்கு மைந்துசத்தி யாகியிருந்தளித்துமுத்தஞ்
சிந்துவா நதியீரைந் தீரைந்து திருவிரலாற் றிகழச்செய்த
வுந்தமில்கா ரணிபெரிய நாயகியென் னன்னைபதந் தன்புகுவாம்.

### தலவிநாயகர் துதி.

4. மருவேழம் புராசியெழு வரையேழும் வலமயிலோன்வருமுன்றான் [போம்
ஒருவேழந் தருபரனை யுமையைவலம் வந்துகனி யுடன்கொண்டோ [னைப்
பெருவேழந் தீர்த்தன்பு தருமேரம் பனைப்பசுந்தேன் பிலிற்றித்தா [ற்றுங்
கருவேழமருந்துதகிர்ச்செவ்வேழமுகத்தானைக்கருத்துள்வைப்பாம்.

### சுப்பிரமணியர் துதி.

5. பருவியகந் தடதடக்கைக்கடகளிறூர்ந்தவனைமுனைப்பரவைமுற்றுந்
துருவியகந் தனிற்கரந்த மாவையறுத் தவனையன்பு தொடர்ந்தோர் [தம்மைச்
சருவியகந் தனையுருக்கித் தனதுதிரு வுருக்காட்டிச் சரணந்தந்தே
மருவியகந்தனைக்குகனைச்சண்முகனைவேலவனைவணக்கஞ்செய்வாம்.

### சண்டேசுரர் துதி.

6. மண்டு தீம்புனன் மண்ணியாற் றாவின்பாற்
கொண்டு பூசை குறித்துசெய் காலையிற்
கண்டு காய்ந்ததன் றாதையின் காலினைத்
துண்டித்தான் பதந் தோத்திரித் துய்குவாம்.

### திருஞானசம்பந்தசுவாமிகள் துதி.

7. விருப்பமுற வாண்பனையைப் பெண்பனையாக்கிக் கழைவேள் விளி [யச்செய்தே
யுருப்பவிரு மக்கரையே யுரைத்தீந்தியக்கரையே யோடஞ்சேர்த்திப்
பொருப்பரையன் மகள்முலைப்பா லருந்தியன்பு புரியவருள் பெற்ற [தெய்வத்
திருப்புகலி யுதித்துநெஞ்சத் திருப்புகலி யொழித்தாரைச் சிந்தை செய்வாம்.

### திருநாவுக்கரசு சுவாமிகள் துதி.

8. பேராழி வரையூடுத்த பாராழி யளந்தமுகில் பெறவே வீறுங்
கூராழி யீந்தபிரா னெந்நாளு மார்த்தியுடன் குலவுமூரி
றோராழி யிரதன்வரு காலையிற்கா சேற்றபிரா னுளவா மையல்
வாராழி கடந்தமுதின் தமிழாழிமொழிந்தவனைவணக்கஞ்செய்வாம்.



### சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி.

9. வெங்கரனை யரித்ததனுக் கரியானுக் கரியானை வெற்பின் மங்கை
பங்கரனைச் சுதாகரனைத்திவாகரனை நயனமெனப் படைத்தகோவை
சங்கரனை யைங்கரனை யீராறு கரனைநல்குங் கடவுள் வாழ்வைச்
சங்கரனைத் தூதுகொண்ட தமிழ்க்கடலா ரனையென்றுஞ்சரணஞ் [சார்வாம்.

### மாணிக்கவாசகசுவாமிகள் துதி.

10. ஒருவாத வாசையின்கூ டொழியாத மலச்சாடி யுற்ற தீமை
வெருவாது சுழன்றபொறி மிக்கதசை தோல்போர்த்து மேவுமில்ல
மருவாம லின்னுமெடுத் துழலாமல் வானருளே வழங்கப் பெற்ற
திருவாத வூராளி யிருபாத கமலங்கள் சிந்தை செய்வாம்.

### (வேறு) சரஸ்வதி துதி.

11. அக்க வடமும் புத்தகமுமபயவரத மணிக்கரத்தாள்
தக்க முளரி தனிலுறைவாள் சத்தார்த்தங்க டருவாணி
மிக்க தவள வுருவமுடன் வெண்டூசுடையாள் வேதாவின்
புக்க மனைவி பங்கயநூ புரத்தா ளுவிற் பொறிப்பாமே.

### குரு துதி.

12. சீர்திகழுந் தொண்டைவளத் திருநாட்டுக் கச்சிநகர்
சாருமரு ளேகம்பர் தனித்ததுணைச் சரண்பரவும்
சீர்சிவவிப் பிரகுலத்திற் றிருவுருக்கொண் டெனையாண்ட
தீரனருட் சிவகுருதாள் சிரத்துமுரத் துந்தினைப்பாம்.

கடவுள் வாழ்த்து முற்றிற்று.

---

### (வேறு) அவையடக்கம்.

13. இருணீக்கும் பருதியென மருணீக்குந்திருத்தேங்கூரிறைபுராணங்
குருமூர்த்தியடியேனைத்தமிழ்ச்செயெனமறுக்கவஞ்சிக்கூறுவேனற்
பொருளோக்க மெழுத்துடன்சொல் யாப்பலங்கா ரக்குற்றம்பொரு [ந்திற்றேனு
மருளோக்க முளவறிஞ ரவைநீக்கி யுலகதனிலறைவ ரன்றே.

## வேறு.

14. சூதமுனிவனருள்வடசொற் கதையைத்தொகுசெந் தமிழதனாற்
போதமுடையோ ரவைநடுவிற் சிறியேன்புகற னகையேயா
மேதமுடவ னருங்கொம்பி னினியபசுந்தே னேறியுணப்
போதமெழுதல் போலுளத்தென் போதமெழுந்த தோதிடினே.

15. மழலை குழறு மொழியதனை மகவா சையினாற் றாய்தந்தை
குழறப் படுமம் மொழிதிருத்திக் கூறிக் குணங்கொண் டுரைப்பது [போல்
தழலைக் கலையைக் கரதலத்திற் றரித்தோன் புகழா கையினவன்ற
கழலைத் திளைத்த பெரியோராற் கழறப்படுமிக் கதைதானே. [ன்

அவையடக்கம் முற்றிற்று.

---

# புராணவரலாறு.

1. திருவமர் மார்பனாதித் தேவரும் முனிவர் யாரு
முருவம ரூனக்கண்ணு முவந்திடக் கண்டு தங்கள்
கருவமர் பவங்க ணீங்கிக் கதிபெறக் கருணை யாலோர்
குருபர னாகி முக்கட் கோவமர் கைலைக்குன்றில்.

2. இந்திரன் பிரமன் மாய னெழின்மிகு தேவர் சித்தர்
சுந்தர முனிவர் யக்கர் தும்புரு நார தாதி
யந்தமில் கணங்கள் வந்தே யனுதினம் போற்றி யேகுஞ்
சந்திர சேக ரன்வாழ் தளிமணி முடியின் வைகும்.

3. அத்தளி முன்றி லந்தி யருநிற வண்ண றன்கண்
மெத்தளி யுருவ மாகும்வியன்சிவ கங்கை யொன்று
புத்தளி முரலு நீர்ப்பூ வொலிந்திட வதியு மந்த
சித்தளி தீர்த்த மூழ்கிச் சிவன்கழல் பணிந்து சூதன்.

4. அம்புலி காந்தக் கல்லி னமைத்தவத் தீர்த்தப் பாங்கர்
சிம்புளி னரசிங் கத்தை சிதைசிவ கணங்கள் வைக
கம்பளி மணி பொன்னாலுங் கவின்செய் மண்டபத்தின் வந்து
வெம்புலி யாச னத்தின் மேலமர்ந் திருந்தா னம்மா.

5. அவ்வயிற் சம்பு பத்த னருள்சதா நந்த னாகி
செவ்விய முனிவர் வந்தச் சிவகங்கை மூழ்கி யைய
னெவ்வமில் பாதம் போற்றி யிதயபங் கயத்தி ருத்தி
கவ்விய மாட்டிப் பூசை கவினுறச் செய்து மாதோ.

6. அம்மணி மண்ட பத்தை யடைந்துநற் சூதன் பாதஞ்
செம்மலர் தூவிப் பூசை செய்துமுன் னிருந்து தூயோ
யிம்மல ருலகி லிந்த வெழில்வரைக்கொப்ப தான
விம்மித முடைய தானம் வேறுறி னுரைமி னென்றார்.

7. உரைசெயக் கேட்ட சூத னுளமகிழ்ந் திருகை கூப்பி
மறைமலர்ச் சிவன்றன் பாத மனத்தடத் திருத்தி நோக்கி
வரைமகள் கொழுநன் பாத வாரிச மலர்ம னத்தீர்
புரைதவ நீங்கள் கேட்ட புகழ்த்தல முண்டு முன்னாள்.

8. இத்திருக் கைலை போல வெழுமுகத் தீற்று வெள்ளம்
பத்திரு திசையும் பொங்கி பரந்திடக் கேடொன்றின்றி
யத்திரு வெள்ளந் தேங்கி யணையெனச் சூழ்ந்து நிற்கச்
சத்தியுஞ் சிவமுந் தங்கிச் சார்தலாற் றேங்கூ ராகும்.

9. என்றுரை செய்யக் கேட்ட வெழின்மிகு முனிவ ரெல்லா
நன்றுரை செய்தீ ரந்த நற்றல மகிமை யெல்லா
மின்றுநா முய்யும் வண்ண மிசைமி னென்ன றடியில் வீழ்ந்தா
ரன்றருள் கொண்டு சூத னன்புட னுரைய லுற்றான்,

10. சத்திய வுலகி னின்றுஞ் சதுர்முகப் பிரமன் முன்னாள்
மெத்திய காசி வந்து வேள்விகள் செய்து வேண்டும்
புத்தியு மடைந்து தான்வாழ் புரமடைந் திருந்தா னந்த
முத்தழல் வேள்வி செய்யு முனிவர்கள் பலருங் கூடி.

11. நினைத்தது முடிக்குங் கங்கை நிறைமணி கர்ணி மூழ்கி
வினைத்தொகையனைத்துந் தீர்க்கும் விசுவேசற்போற்றிமேற்சொன்
னினைசம தக்னியோடு நிகழ்பரா சரன் வசிட்டன்
தனைப்புகழ் விசுவா மித்திரன் சௌனகன் பாத்து வாசன்.

12. கோதமன் பிருகு வத்திரி கோசிகன் காசிபன் கோ
மூதுரை நாரதாதி முனிசன காதி மற்று
மேதகு போத னாதியனைவரு மியைந்து கூடி
நாதனா ரருளி னாலே பொதியமா மலையினுற்றார்.

(வேறு.)

13. அருந்தவனா மகத்தியனை யரியணையி லிருத்தியுயர்
திருந்துபசா ரமும்பூசை செய்து துதித் தடிபணிந்து
கருந்தடங்கண் ணுமைபாகன் கயிலையினுக் கிணைபுவியிற்
பொருந்துதல முளதேலப் புரிமகிமை புகன்றிடு நீ.



14. என்றலுநங் குறுமுனிவ னருந்தவத்தீர் வினவியது
நன்றிங்கோர் தலமுண்டா மதுகயிலை நகர்க்கதிக
மின்றிதனின் பெருமையென்னா லியம்பவரி தாயிடினு
மொன்றினவா றுரைக்கின்றே னுரைமனத்து மொருமையுளீர்.

15. அத்தலங்கள் பலகோடி யாமதனி லிதற்கிணையா
யொத்ததல மிலையன்றி யுயர்ந்ததல மில்லைமுது
முத்துமணி யுங்கொழித்து முகிலஞ்ச வகில்வேர்கீண்
டெத்துபொனி நதித்தென்பா லிமையோரேத் துந்தலங்கள்.

வேறு.

16. மேவுங் குடந்தை கலையநல்லூர் விளங்குஞ் சேறை யிடைமருதூ
ரோய்வில் திருவா வடுதுறையு முயர்வாங் கௌரி மாயூரங்
காவு நெருங்குந் திருக்கடவூர் கருதற் கரிய நள்ளாறும்
வாவி சூழும் புகலூரும் வருவிற்குடிமுக் கூடலுமே.

17. சிறந்த நாகைக் காரோணஞ் சிக்கற் கீழ்வே ளூர்தேவூர்
நிறைந்த புகழ்சேர் திருவாரூர் நீரார் குவளை திருவாய்மூ
ரறஞ்சேர் திடுநல் வலிவலங்கன் றூப்பூர் திருக்கா றாயிறிரு
வுறைந்த பதிகச் சினங்கோட்டூ ருயர்வாங் கொள்ளி வனக்கீழ்பால்.

18. மலரோ னலரி முதலாய வானோர் வணங்க வருஞ்ஞானத்
தலமா நெல்லி வனத்துக்குத் தக்கநிருதி மூலையின்கண்
ணிலவார் சடையா ருமையுடனே நீங்கா துறைந்து சுரர்முதலோர்
பலரா தரிக்க வென்றும்வரம் பரிந்தேயளிக்குந் தலமிதுவாம்.

19. எனவே மொழிந்தார் குறுமுனிவ ரிருடிகணத்துச் சவுனகர்தா
னினைவா னுணராச் சிவசரிதை நிகழ்த்தத்தீர்ந்தோ நெடிய பவஞ்
சினமூ விலைவேற் பிரான்மகிழுஞ் சிந்துநிரோத புரமென்ன
மனமே குளிர வரும்பெயரின் வரலாறுரையின் மகிழ்ந்தென்றார்.

20. விரவி பதினெண் புராணத்துள் விளங்குங்காந்த புராணத்திற்
றரணி புகழ்ந்த சனற்குமா சங்கிதையின்மெஞ் ஞானநெறி
பரவு முபரி யாகத்திற் பகர்ந்ததெய்வ மான்மியநங்
குரவ னுரைத்த பரிசிதென்று கூறுகின்றார் குறுமுனிவர்.

புராணவரலாறு முற்றிற்று.

## 2. தலவிசேடச் சருக்கம்.

1. பலபல யுகங்கடந்து படர்ந்தகற் பாந்தத் தோர்கால்
விலகரு நான்கு திக்கும் வெண்டிரைப் புணரி மேன்மே
லிலமெலா மகலப் பொங்கி நித்திலம் வீசி யாசை
குலவிவித் துருமக் காட்டுக் கொடிகள்வேர் பறித்துச் சிந்தி.

2. மடங்கடை வருடை பாய்ந்தும் வலிமுகக் கலைகள் கீன்றும்
படர்கொடித் துருவத் தோங்கும் பரிதியின் குழாங்க ளென்ன
வடருந்தேத் தடையார் செந்தே னருவிதா ழிருவிச் சூழல்
நடமிடு மஞ்ஞை யஞ்ச நாமவேர் பறித்து மோதி.

3. வருபுனற் சுறவு பாய்ந்து வருக்கையின் கனியுந் தேமா
தருகனி பூகத் தாறுந் தாழையு முதிர்ப்ப வெற்பிற்
பொருகடக் கரடக் கன்றும் பொறியுமிழ் தறுகட் பேழ்வாய்ப்
பெருவரை யுளியஞ் சீயப் பிள்ளையும் வெள்ளத் தாழ.

4. கடலிடைப் பிறந்த வெங்கட் களிறொடும் பன்றி வாசி
மிடலுடைப் பொருப்பி லுள்ள மிருகத்திற் கலப்ப நீரிற்
படர்திமிங் கலமே யாதி பலபல மீன மெல்லா
முடுவெனக் கிளரு மீனத் துடன்கலந் துவப்புச் செய்ய.

5. மடவையே சுறவே யல்ல மகரமே திருக்கை சீலி
மிடலுள கொடுவாய் கால வெள்ளிறால் சிறகி வல்வா
லடல்புரி யோங்கில் பாரை யரும்பனை மீனே யாதி
கடலின்மீன் நாட்டின் மீனைக் கலந்துவிண் பாய்ந்த தன்றே.

6. கொண்டதெண் டிக்குங்கொண்டுகொண்டன் மண்டலமுங்கொண்டு
முண்டக மலர்த்தும் வெய்யோன் முதியமண் டலமுங் கொண்டு
மண்டிவெண் மதிநன் னொடு மற்றுள விபுதர் நாடுந்
தெண்டிரை நுரைகள் வீசித் திசை யெலாங் கொண்டு செல்ல.

7. பெரும்பெருக் காகி யெங்கும் பிரளய வெள்ளங் கோப்ப
நெருங்குபல் லண்ட கோடி நிறைந்துயிர்க் குயிரா மூர்த்தி
மருங்குறை வல்லி யோடு மகிழ்ந்துமால் வெள்ளிக் குன்றி
னிருந்துதிக் கழுந்தத் தெண்ணீ ரெழுந்தது நோக்கிச் சொல்வான்.



8. இத்தலத் தன்பு கூர்ந்தே யிறைவியோ டிருந்தோ மன்றி
பத்தரு மனைக ளிந்தப் பதிகொள வொன்று தென்றே
கொத்தலர் கடம்பு சூடி குருகலர் குன்றங் கீண்ட
வித்தக வேலன் றன்னை மேற்றிசை காக்க வைத்தான்.

9. மிளிர்தனிக் கோட்டிற் காதை மேருவிற் பொறித்த நேயக்
கிளர்துகிர் மேனிக் கோனைக் கீட்டிசை காக்க வைத்தா
னுளமகிழ் பரிக லத்தே யுடனுண்டு சடையிற் சூடும்
வளர்தொடை புனைந்த சேயை வடதிசை காக்க வைத்தான்.

10. புக்கதோர் நால்வர் ஞானப் புணரியி னமுந்தத் தந்த
தெக்கண மூர்த்தி தன்னைத்தென் றிசை காக்க வைத்தான்
மிக்கபே ருந்தி வெள்ளம் வெருவியே சுற்றித் தேங்கி
பக்கநா டனைத்துங் கொண்டு பாழிமட் டுயர்ந்த தன்றே.

11. அஞ்சிய விபுத ரோரைந் தடக்கிய முனிவர் கானம்
விஞ்சிய கருடர் சித்தர் வெருவிவந் தடைந்தா ராசை
நெஞ்சுறு நெறியின் மிக்க நேயநல் லடியார் புக்கார்
தஞ்சமென் றியாரு மந்தத்தலத்தைவந்தடைந்தே யுய்ந்தார்.

12. வடவையை யடக்கிப் பார வரைகளை யுருட்டி வீறும்
புடவியை நிறைத்து வானப் புயல்முகந் தெழுந்த வெள்ள
மடர்திசைத் தசக்கு ரோசத் தளவையி னகன்று நிற்ப
படர்நறை மலரோன் மாயன் பரிந்துதி சயித்து நின்றார்.

13. மருவரும் வெள்ள மஞ்சி மறியட்டு நிற்ற லாலே
நிரம்பிய வுண்மை சிந்து நிரோதமா நகரி யென்றே
விரும்புபே ரானதன்றி மிளிர்ந்து நீர் தேங்க லாலே
யுரந்தரு திருத்தேங் கூரென் றுரைத்திடும் பெயரும் பூணும்.

14. எத்தலங் கடல்கொண் டாலு மித்தலங் கொள்ளா தென்றே
வத்தலந் தன்னை நாடி யடைந்தனர் விபுத ரெல்லாஞ்
சித்தரோ முனிவ ரியாருஞ் சேர்ந்தனர் திசையி னுள்ள
பத்தர்வந் தடைந்தா ரியார்க்கும் பதியிடங் கொடுத்த தன்றே.

15. ஆயிரங் கோடி யுண்டே வத்தனார் தலமிவ் வூர்போல்
மேயவெண் கயிலை மீதே விமலனா ரிருப்ப விண்ணும்
பாயிரும் புவியுங் கொண்ட பரவையி னுகந்த வெள்ள
மாயையாற் சுற்றித் தேங்கி யஞ்சுமப் பதியு முண்டோ.

16. செறுத்தல கயின்ற வெள்ளந் தேங்கிச்சுற் றொதுங்க லாலே
மறிக்கொடுங் காலன் செய்யும் வஞ்சமு மில்லை ஞான
முறச்சிவ லோக நல்கு முண்மையென் றிந்த வூரின்
பிறக்கவே விபுத ரெல்லாம் பெருந்தவ மிழைத்து மென்றார்.

17. விலக்கரு முகாந்த வெள்ளம் விலகிய திருத்தேங் கூரைப்
பலனுற நினைந்தா ராகிற் பாதக முழுதுந் தீருந்
தலமிதித் தனரே யாகிற் சாரூபங் கிடைக்கு நாளு
மிலகவே வாசஞ் செய்வோ ரிருங்கதிக் கெல்லை யுண்டோ.

18. மற்றொரு பதியி னின்றும் வழிச்செல்வோர் தூரத்தேனுங்
கொற்றவன் றிருமு னின்ற கோபுரந் தரிசித் தாரேற்
சிற்றரு மறைக் கெட்டாத சிவலோகஞ் சேர்வ ரென்றே
பற்றுடன் றரிசிப் பார்தம் பரகதிக் கெல்லை யுண்டோ.

19. நிவர்பெரும் புணரி நீத்த நித்தமான் மியத்தைக் கூற
சவுனகர் முதல்வ ராய தபோதனர் மகிழ்ந்து நீரே
சிவகதை யுரைப்பக் கேளாத் தீவினை தீர்ந்தோ மியாங்க
ளெவர்களு முய்யும் வண்ண மின்னுமொன் றுரைத்தல் வேண்டும்.

20. வெள்ளிமா மலையிவ் வூரின் மேவிய வாறு மெங்கள்
வள்ளன்மா துடன்வந் தெய்தி வதிந்தமான் மியமு மெங்கட்
குள்ளவா றுரைமி னென்ன வுபநிட தத்தி னுள்ள
தெள்ளிதாம் பொரு ளனைத்துந் தெளிமுனி கூறு மாதோ.

தலவிசேடச்சருக்கம் முற்றிற்று.

## 3. வெள்ளிமலைச் சருக்கம்.

1. அண்டங்க டனையகத் தடக்கிக் காக்குமோர்
கொண்டல்மே னியனுளங் குழைக்குங் கோமளை



முண்டக மலர்க்கொடி முத்த நன்னகை
யொண்டொடி சுதையுழை யுதித்த செய்கையாள்.

2. கருத்தருள் பரப்பித்தான் கடைக்க ணித்திடு
வரத்தினா லெவர்க்குநல் வாழ்வு நாடொறும்
பெருக்கவே யளிக்குமிப் பெற்றி வேண்டுமென்
றரிக்கினி துணர்த்தியே யகன்று போந்தனள்.

3. எந்தையை யீசனை யிறையைத் துன்னியே
சந்ததந் தவஞ்செயத் தக்க தாந்தல
முந்தமி லுலகமீ தாய்ந்து செல்லு நாள்
வந்தன ளித்தல வளமை நோக்கினாள்.

4. மெய்யெலாம் புளகமே மேவ வானந்தஞ்
செய்யுமித் தலந்தவஞ் செய்தற் காமெனத்
தையலு முவந்திந்தத் தலத்தில் வைகியே
மொய்யடற் கலுழனை முன்னி னாளரோ.

5. வரையடி பெயர்வுற வாசம் வீசியே
கருடனு மெய்தியே கமல நாயகி
யிருசரண் வணங்கியே யின்று நான்செயுந்
திருவருட் பணிவிடை செப்பு கென்றனன்.

6. ஆதியா மகண்டனை யமல மூர்த்தியை
மீதிலெவ் வண்டமும் வியாபி யாகிய
நாதனைத் தவத்தினா னான்கண் டோர்வாம்
பேதமை யுறுவகை பெறுதல் வேண்டுமால்.

7. இத்தலங் கிடைத்தது வெனது புண்ணிய
முத்தமன் கயிலையி னுயர்ந்த பல்வகை
யத்தகு கொடுமுடி யாயி ரத்துமேல்
வைத்திடுமெட் டினுள் வாங்கி யொன்றினை.

8. இவ்வுழித் தருதிநீ யெனலுந் தாள்பணிந்
தவ்வணங் கருதியே யகன்று போயெங்க
ணவ்விடந் திருக்கர நாதன் மேவிய
செவ்விமால் வரையினைத் தெரிசித் தானரோ.

9. ஆயிரங் கோடிமே லமைந்த பன்மதி
மேயவெண் சுடர்நிலா விரிந்த தாமென
மாயிரு ஞாலமும் வானு மாசையுந்
தூயபல் லண்டமுஞ் சுடர்த னோக்கினான்.

10. பலபல வருடைகள் பாய்தொறுந்தருக்
குலநிறை யிறால்குதி கொண்டு சிந்திய
நலநிறை மதுவினைநாளுமள்ளியே
கலவர்கைக் கொடுநகர் காட்சி நோக்கினான்.

11. குரும்பையின் முலைமிசை குளிர்ந்த குங்கும
நிரம்பியுட் கலத்தலு நிறங்கள் வேறுபட்
டுரம்பெறு முலம்பெயர்த் தோடச் சேடுடை
யரம்பையர் படியும் வெள்ளருவி நோக்கினான்.

12. அடரரி சந்தனத் தலங்கற் பொற்கொடி
படர்தரக் குளிர்நிழல் பரப்பு மாயிடைக்
கடகரிக் கன்றுமான் கன்று மொன்றியே
தொடர்புலிக் குருளையுந் துயில நோக்கினான்.

13. வரியரா வுமிழ்ந்தசெம் மணியும் வன்சமர்
புரிகரி மருப்புமுன் பொழிந்த முத்தமுஞ்
சொரிநறைக் கற்பகச் சோலை நீழலில்
விரிவெயி லுடனிலா விரிப்ப நோக்கினான்.

14. எய்தின னருகுநின் றிறைஞ்சி யெந்தையை
மைதவழ் களத்தனை மனத்தி லுன்னியே
யுய்தரக் கொடுமுடி யொன்று கீண்டன்பு
செய்துல களிக்குநந் திருமுன் வந்தனன்.

15. வைத்தனன் வெள்ளிமால் வரையின் கோட்டினை
யத்தலம் பொறையுற வழுந்தி நின்றதால்
முத்துற ழிளநகை முளரி மாமல
ரொத்தமா முகக்கொடி யகந்து நோக்கினாள்.



16. நெஞ்சகங் குளிர்ந்தன னிமலன் வந்தனை
யஞ்சலென் றருளுமென் றன்பு மீக்கொள
வஞ்சமஞ் செழுத்தினை வீறி யந்தர
மெஞ்சுறா தெழுநிலைத் திதன்முன் னாகவே.

17. இருந்துமை பாகனை யிதையத் துன்னியே
யருந்தவம் புரிதலு மலரின் மீதுறை
திருந்திழை யன்பினைச் சிந்தை செய்துடன்
விரிந்தசெஞ் சடைப்பிரான் விடையிற் றோன்றினான்.

18. விதுவினு நிலாச்சொரி வெள்ளிக் குன்றின்மீ
துதையமாந் தினமணி யொப்ப வெண்பிறை
மதுமலர்ச் சடையுடன் வயங்க வாளராப்
புதியதோள் வளையமே போலத் தோன்றவே.

19. உந்தியம் பதுமமீ துலகம் யாவையுந்
தந்தநா யகியுமை சைலப் பைந்தொடி
சுந்தரி யொருபுறந் தோன்ற வெண்குடை
முந்துகுண் டோதரன் முறையிற் றாங்கவே.

20. குரும்பையின் றுணையெனக் குலவு பூண்முலை
யரம்பையர் கவரிநின் றருகி ரட்டவே
சுரும்பிமிர் சுரிகுழற் றோகை மாரொடும்
விரும்புகின் னரர்பலர் வீணை பாடவே.

21. மருங்குற நெருங்கியே வான துந்துமி
கருங்கடல் வெண்டிரை கடுப்ப வார்ப்பவே
இருங்கிளைச் சுரர்கலந் தெய்த நாற்றிசை
வருங்குறட் பூதமால் வரையின் மொய்ப்பவே.

22. கரமொரா யிரங்கொடு கசிந்து வாணனார்
வரமெனுங் குடமுழா வாசித் தெய்தவே
பரவியே வேத்திரம் பரித்தி யாரையும்
நிரலுற நந்திதா னிறுத்தி நிற்பவே.

23. பலவொளி திசைதிசை பரப்பி நித்தில
நிலவுமிழ் பந்தரி னிமல னெய்தலு
மலர்மழை பொழிந்தன ரமர ரன்புடன்
மலர்மகள் நோக்கினாள் மகிழ்ந்து வாழ்த்தினாள்.

24. நித்தனே போற்றிநன் னிலனும் யாவுமாஞ்
சித்தனே போற்றியோர் செல்வி பங்குறை
முத்தனே போற்றிவான் முதல்வ போற்றியென்
னத்தனே போற்றியென் றடி வணங்கினாள்.

25. அரனலர் நங்கையை யன்பி னோக்கியே
வரமினி வேண்டுதல் வழுத்தி யென்றலும்
பார்களு மென்கடைப் பார்வையா லெழில்
விரவிய செல்வமே மேவ வேண்டுமால்.

வேறு

26. அய்யனே யிவ்வர மருடி யென்றலுமலர்த்
தையலா ளுரைத்தலுந் தன்கைவைத் தெம்பிரான்
வையகம் வானக மற்றுநீ யன்புளஞ்
செய்யவே யவரவர் செல்வமே மேவுவார்.

27. தந்தனம் வரமெனச் சாற்றலு முள்ளரைப்
பைந்துணர்ப் பரிமளப் பங்கயத் துறைதரு
செந்திரு மெய்யெலாஞ் சிலிர்ப்பவே மிகமகிழ்ந்
தந்தமில் செய்கையா னருளினை நாடியே.

28. இன்னமு மொருவர மீதலே வேண்டுமென்
றன்னவ ளுரைத்திடு மமலனே யிவ்வயின்
மன்னிய சுடரொளி வயங்கிடக் காட்சிசெய்
தின்னுரு விளக்கமாய் நிறைதலே வேண்டுமால்.

வேறு

29. வியனுறு மித்தல மிதித்த பேருக்குந்
துயலொளி விளக்கமாஞ் சுயம்பு மூர்த்தியை
பயனுற வொருபகல் பணிந்த பேருக்கு
முயர்சிவ லோகமே யுறுதல் வேண்டுமால்.



30. எனவரம் வேண்டலு மிசைந்து வெள்ளியம்
பனிவரை மீதிலேய் பரம மூர்த்தியே
மனமகிழ் சுயம்புவாய் வந்து தோன்றலுந்
தனதுளங் குளிர்ந்தனள் சலசத் தையலே.

31. செந்தயிர் பால்கனி தேன் சருக்கரை
முந்தபி டேகங்கள் முடித்து மான்மதஞ்
சந்தனக் குழம்பொடு சாத்தித் தேனினம்
வந்துள பரிமள மாலை சாத்தினாள்.

32. பூசனை யீசனைப் புரிந்து பல்பகல்
வாசமார் மலர்த்திரு வதிந்த பின்னரோ
தேசிகன் விடைதரத் திருமுன் போற்றிநின்
றாசறு கமலவீ டடைந்து வைகினாள்.

(வேறு.)

33. கொங்கார் கமலப் பூங்கொடிக்குக் கொடுத்த வரத்தா னீங்காதே
எங்கோன் வெள்ளி மலைநாத ரெனவே போற்றி நிதமமர்ந்து
பொங்கா தரவிற் சன்னிதியிற் புகுந்து போற்று மவர்க்கெல்லாம்
மங்கா வாழ்வு சிவலோக வாழ்வு தவறா தளிக்கின்றார்.

34. கருமந் தனக்கா யித்தலத்திற் கணப்போதிருந்தா ரானாலும்
பரமன் பெயரைத் தூரத்தே பதிய நினைந்தோ ரானாலும்
விரவுஞ் சிகரந் தனைநோக்கி விரைந்து பணிந்தோ ரானாலும்
வரதன் வாழுஞ் சிவலோக மருவி நாளும் வாழ்வார்கள்.

35. முளரி மடந்தை சிவபூசை முடிக்கும் பதியே யாகையினால்
வளமே கலந்த வித்தலத்தில் வாசஞ் செய்வோர் தமக்கு நல்ல
உளமே குளிரச் சிவன்றனை யுரைப்பார் தமக்கு மெந்நாளு
மளவி லாத பெருஞ்செல்வ மடையும் வானா ளதிகமதாம்.

36. அண்ணல் வெள்ளி மலைநாத ரடித்தா மரையைக் காயாம்பூ
வண்ணன் மனைவி பூசித்த வளர்மான் மியத்தைக் கேட்போரு
மெண்ண மகிழ்ந்து கற்போரு மென்றும் பெருவாழ் வெய்திப்பின்
றிண்ணஞ் சுரர்க்குங் கிடையாத சிவலோ கத்தில் வாழ்வார்கள்.

37. இந்த வாறு குறுமுனிவ ரிசைக்க முனிவ ரினிதுவந்து
சிந்தை குளிர்ந்தோ மெனமுகமன் செப்பிக் கயிலைத் திருவரையே
வந்த ததனிற் சிவன்சுயம்பு வடிவாய்த் தோன்று மிவ்விலிங்கம்
முந்து பெரும்பூ சனைமுடித்தோர் முறைமை யுரைமி னெனவுரை
[ப்பார்.

38. இவ்வூர் தானே கயிலாய மெல்லை கயிலா யத்தெல்லை
யவ்வூர் தன்னில் வாழ்வாரே யமர ராகு மாகையினு
லொவ்வா திவ்வூர்க் கெவ்வூரு முயரும் வெள்ளி பூசித்துச்
செவ்வான் மேனிப் பிரானருளே சேர்ந்த சரிதை செப்புதுமால்.

வெள்ளிமலைச் சருக்கம் முற்றிற்று.

---

## 4. சுக்கிர பகவான் பூஜைசெய் சருக்கம்.

1. முன்னமொரு காலையடல் முற்றவுண ராணோர்
மன்னவன் வயங்குபடை மாவலி யெனப்பேர்
பன்னவுல காள்பதி படைக்கலம் விடுத்தே
யின்னல்பட வானவ ரிருக்கைதிறை கொண்டான்.

2. இந்திரன் முதற்புலவ ரெண்டிசையி னுள்ளோர்
சிந்தனை யுழந்துதம செல்வமும் விடுத்தே
வந்துமல ரோனடி வணங்கியவு ணேசன்
சந்ததம் விளைக்குமிக றன்னையுரை செய்தார்.

3. மூசுநற வத்தொடு முருக்கவிழ் பொகுட்டின்
வாசமல ரோன்வெருவு வானவர்க ளோடுங்
காசினி முதற்பல கலந்ததிரு வுந்திக்
கேசவ னருந்துயில் கிளர்ந்தகட லுற்றார்.

4. சென்றடி வணங்கியலர் செம்பதும நீலக்
குன்றனைய மேனியுள கொற்றவனை வாழ்த்தி
நின்று கொடு மாவலி நிசாசரன் வயத்தே
மென்று முறை யிட்டவ ரெழுந்தபய முற்றார்.



5. அஞ்சலினி யஞ்சலென வன்புடனளித்தவ்
வஞ்சகனை யுற்றவன் வலத்தினை யடக்க
விஞ்சுதிதி மைந்தனென மேவுது மெனப்போ
ரெஞ்சவடு வண்டிகிரி யேந்தலுரை செய்தான்.

6. மாயனை மகிழ்ந்தமரர் வந்தனை புரிந்தே
போயின ரிருக்கைமுகில் போலொளிரு மெய்யன்
றூயதொரு மாதுதிதி சுந்தர வயிற்றின்
மேயசிறு வன்குறளின் மேனியொ டுதித்தான்.

7. முஞ்சிபுனை நாணுடனே மூசுசிகை தாழ
விஞ்சுசிறு மானுரிவை மெய்யொளி துலங்க
நெஞ்சமற வாதுமனு நேர்மறை செபித்து
வஞ்சவடிவாங் குறளன் வந்தெதிர் நடந்தான்.

8. பண்ணவ ருடன்புவி பரித்தவசு ரேசன்
விண்ணவர் நடுங்கவொரு வேள்விபுரி காலை
மண்ணகம் விளங்கவரு வாமனன் வனப்பைக்
கண்ணிணை களிக்கவெதிர் கண்டடி பணிந்தான்.

9. வந்தனை தவப்பயனின் மற்றுன தவாவை
சிந்தைநெறி கொண்டினிது செப்புதி நீயென்ன
வந்தருறள் மேனியன் மகிழ்ந்தருளி யீயாய்
முந்திய நலத்தினொடு மூன்றடிமண் ணென்றே.

10. வாமன னுரைக்கமுது மாவலி மகிழ்ந்தே
யாமிது நலத்தொடு மளிப்பனென லோடும்
தாமவன மால்கபடஞ் சார்வடிவி தென்றே
கோமகனை மந்திரி கொடும்புகர் தடுத்தான்.

11. வையக மகட்டிடை வளர்க்குமுது மாயன்
கையவரின் மெய்வடிவு கண்டுதவு தானம்
வெய்யதெனு மோவிதனின் மேலறமு முண்டோ
வையமற யாதுவரு மாகினு மளிப்பேன்.

12. என்றவுணர் கோமக னிசைந்து மனையாளை
மன்றலுத கம்பொழிதி மன்னுதவ வென்னச்
சென்றுகர கத்துளை திகைப்புற வடைத்தா
னின்றவுணர் பேரினை நிறுத்துபுக ரானோன்.

13. மாதவ னுணர்ந்துபுகர் வஞ்சனைய தென்றே
மீதொரு தருப்பைகொடு மென்கரக நன்னீர்
போதுபுரை யைத்துளைசெய் போதுபுகர் கண்ணொன்
றேதமுறல் கண்டென வெழுந்து திசைபுக்கான்.

14. உற்றவர்கள் போலரு குறைந்து பலகாலுங்
கொற்றவர் கொடுப்பவை கொடாவகை தடுக்கப்
பெற்றவர் பெறும்பெரிய பேறிதென வோர்கண்
செற்றனன் முராரிபுகர் சென்றன னொதுங்கி.

15. அன்றுமுத லாகமன மஞ்சியடர் கானின்
சென்றுவழி தந்துதினஞ் சிற்சில செல்காலை
வென்றிதரு மால்பகை விளங்குசிவ பூசை
இன்றுபுரி யிற்செலு மெனப்புகர் நினைந்தான்.

16. அத்தனம தன்பினை யறிந்தருள்செய் தற்கா
மித்தல மெனப்பெரிது மெண்ணியுயர் சுங்க
னுத்தம தலங்களினி யுண்டுபல கோடி
யெத்தலமு மித்தலமெனப் புதுமை யுண்டோ.

17. மாதவ னிருந்ததல மன்றிமதி நாடும்
பூதலமு மெவ்வயினும் புக்கபெரு வெள்ள
மீதுவர வஞ்சியயன் மேயதல மென்றால்
நீதமுறு மிப்பதியி னேர்பதியு முண்டோ.

18. தள்ளுதிரை சுற்றுபுவி தன்னிலினி நாடின்
வள்ளலுமை யாளிட மகிழ்ந்துறை மலர்ப்பூங்
கள்ளவிழ் பொகுட்டிலுறை கன்னிதொழ வந்தே
வெள்ளிமலை நாதர்மகிழ் வியன்பதிக் கொப்பியாதோ.



19. என்னமன நாடியுய ரெண்கிரக ரோடு
மன்னுதல மெய்தியர னர்ச்சனை புரிந்தே
பன்னுதுதி செய்தடி பணிந்துருக நாடி
மின்னினுட னேபரமன் வெள்விடையின் வந்தான்.

20. கண்டனர் மகிழ்ந்தனர் கசிந்தனர் வியப்புக்
கொண்டனர் துதித்தனர் குளிர்ந்தனர் பிரானும்
விண்டுனை வெறுத்ததை விலக்கின முமக்கே
அண்டர்புகழ் நட்புடைய னவனினி யென்றான்.

21. வந்துமை வணங்கினவர் மன்னுபுவி மீதே
சிந்தனை விரும்புபல செல்வமொடு வாழ்வார்
சந்ததமு நங்கருணை தந்தன மெனப்போ
யெந்தைபெரு மானுமவ் விலிங்கமிசை புக்கான்.

22. தத்தமது பேர்கொடு சமைத்தன ரிலிங்க
மத்தகை யுடன்வருட மாயிர நடக்க
வத்தம விலிங்கமவை யொன்பதினை மிக்க
பத்தியொடு பூசனை பரிந்துபுரி தந்தே.

23. சுக்கிரன் முதற்கிரகர் தூயதல மீதே
மிக்கசிவ னர்ச்சனை விடாதநெறி யோராய்த்
தக்கபரி சுய்த்தருட ரித்துவிடை கொண்டே
புக்கனர் தமக்கமை புரத்தின் மகிழ் வெய்தி.

24. காயமுதலி யாவு மளவிக்கரை கடந்தே
நாயக னமர்ந்ததல நண்ணரித லாலும்
மேயசுடர் வெள்ளிமலை விமலனுற லாலுந்
தூயகயி லைக்குநிகர் சொல்வரிதை நல்லோர்.

25. ஆதலினிவ் வூரினை யடைந்தவ ரெவர்க்கு
மீதிவரும் வெள்ளமுதல் வெம்பகையு மில்லை
போதிலுயர் பைந்தொடி புணர்ப்பனுயர் செல்வ
மேதமுத வுங்கிரக மென்றநல முய்க்கும்.

26. கண்ணுதல் புராணமிது கற்றவர் தமக்கும்
விண்ணவர் துதிப்பவிதை வினவினர் தமக்கு
மண்ணல்பதி நன்றென வமர்ந்தவர் தமக்கு
மெண்ணுபதி ஞென்றெனு மிடப்பல னளிப்பார்.

27. கூறின ருணர்ந்துவகை கொண்மலைய வெற்பர்
வேறுபல மாதவரு மெய்ப்புளக முற்று
நூறுபல வாண்டுதவ நோற்ற பயனுற்றோம்
பேறிதன்மே லில்லையெனப் பேசலுறு வாராய்.

28. இன்னுமிதன் மேன்மையை யிசைத்தருண்மி னென்ன
முன்னமொரு சேய்பரமர் முண்டக மலர்த்தாள்
சென்னியின் வணங்கி யரசெய்து கதைதன்னைத்
துன்னுமுனி வோர்களொடு தூயர்மொழி கின்றார்.

சுக்கிரபகவான் பூசைசெய்யும் சருக்கம் முற்றிற்று.

---

## அரிந்தமன் சருக்கம்.

1. சிந்தை யன்பிற் சினகாஞ் சூழ்வந்து
நந்த லின்றி நவக்கிர கங்களுந்
தந்த லிங்கந் தமைத்தனி போற்றவே
வந்த பேர்க்கு வரந்தந்து வைகுமே.

2. நயந்த நண்பி னவக்கிர கத்தின்பே
ரியைந்த லிங்கத்தை யென்றும் வணங்கியே
கயந்த பாவக் கடல்கடந் தன்புபெற்
றுயர்ந் துளோர்க ளலப்பில ரன்னருள்.

3. அண்ட முற்று மளாவு மகிற்புகை
கொண்டல் பெய்யுங் கொழுமழை நீரொடு
மண்டி யெங்கு மணங்கமழ் மாண்புடை
எண்டி சைக்கு ளினிதங்க தேயமே.



4. அந்த நாட்டுச் கதிபதி சோதனென்
றெந்த நாட்டு மிசைபெற்ற மேன்மையான்
கொந்து லாந்தொடைக் கொற்றவர் யாவரும்
வந்து போற்ற மனுநெறி யாற்றினன்.

5. வளர்ந்து குங்கும வண்டல் துளைந்துடை
தளர்ந்து நோவத் ததும்பிக் கனத்துடன்
குளிர்ந்த கொங்கையர் கொள்கையிற் கூடியே
கிளர்ந்து வாழ்வு கெழுமுற் றுறைபுநாள்.

6. விருப்ப மாமொரு மெல்லிய றன்னுழை
கருப்ப மெய்தலுங் கண்டு மகிழ்ந்திரு
பொருப்பே னுந்தனம் பூங்கண் கறுப்பவத்
திருப்ப யந்தனள் சேயொன்று திங்கள்போல்.

7. மன்ன னுள்ள மகிழ்ந்தந்த வாசவன்
பொன்னை யன்ன புரோகிதர் தன்னுடன்
றன்னருஞ் சுதன் சாதகஞ் செய்யுமென்
றின்னல் தீர விசைத்தன னின்புற்றான்.

8. மதியி லக்கின வாரமற் றோரைநா
டிதியெ னப்பல தேர்ந்திந்தச் சேயினாற்
பதியு மன்னவன் பண்புங் கெடுமென
விதியை நொந்து மெலிந்தனர் வேதியர்.

9. வேந்த னோடு விளம்புதற் கஞ்சிநின்
றாய்ந்து பின்னு மரச னுடன்சுதன்
போந்த நாளிது பொல்லாங் குறுதலா
லேய்ந்த கானி விடுவது நன்றென்றார்.

10. பன்னியோ டந்தப் பார்த்திபன் மாழ்கிநின்
றின்ன செய்கைவந் தெய்திய தூமெனச்
சொன்ன வாறச் சுதனையோர் கானகந்
தன்னி லிட்டுத் தளர்ந்தொல்கி யேகினன்.

11. ஞான நன்னெறி நாடிய கோசிக
னான மாதவ னன்புடைச் சீடர்தாங்
கானி லேயிலை காய்கனி வேண்டியே
போன காலைப் புதல்வனைக் கண்டனர்.

12. இயைந்து செங்கதி ரேய்ப்பக் குழவியும்
பெயர்ந்து காலிற் பெருவிர லைச்சுவைத்
தயர்ந்து வெம்பசி யாற்றா தரற்றிட
வியந்து நோக்கி விதிர்விதிர்ப் பெய்தினார்.

13. ஏது காரண மிவ்வயி னிச்சுத
னாத ரஞ்செய்யு மன்னையு மின்றியே
போது மிந்தப் புதுமைநன் றென்றுதா
லோது சீட ருடனெடுத் தோடினார்.

14. பண்டு யாம்பயில் பன்மராக் காவினிற்
கண்ட னமிந்தக் காதலன் றந்தைதா
யுண்டொ வின்றோ யாமுண்மை துணிந்திலங்
கொண்டு வந்தனங் கோசிக வென்றனர்.

15. பிள்ளை தன்னைப் பெருமிதத் தோடுகண்
டுள்ள மன்புற் றுடன்வளர்த் தானந்த
வள்ள னாண்மதி போல வளர்ச்சியுற்
றெள்ளொ ணாக்கலை யீரைந்திற் கற்றனன்.

16 வயதொ ரீரைந்தின் வான்கலை கற்றுவான்
புயலின் மின்னெனப் பொற்புற்று வாழுநாள்
முயலும் பேறு முழுதுமெய் தாதிவ
னயல்பு கின்மற் றியாவுங்கிட் டாமையால்.

17. வருந்தி மைந்தன் மயலுறக் கோசிகன்
றிருந்து ஞான திருட்டியிற் கண்டுகோன்
பொருந்த லின்றிப் புணர்ந்ததென் றித்துயர்
பிரிந்து செல்லுமப் பெற்றிமற் றெண்ணினான்.



18. ஐயன் வெள்ளி யசல பதியின்முன்
றுய்ய கோட்கள் துணர்கொடு பூசனை
செய்ய வந்த சிவலிங்க மர்ச்சிக்கி
லுய்யு மென்ன வுயர்முனி யெண்ணினான்.

19. நீயு தித்த நிலைமையுந் றந்தையிற்
போய லக்கண் புரிவது நன்றல
சேயு னக்கொன்று செப்புவன் கங்கையா
லாய தீர்த்தத்தி லாடிநல் லன்பினால்.

20. விரவு தீவினை விட்டக லும்படி
வரத வெள்ளி மலைநாதர் தம்மையுங்
கிரகர் பூசை கிளர்லிங் கத்தையும்
பூரவி யர்ச்சனை பண்ணுதி போயென்றான்.

21. வினவி யேவிசு வாமித் திரனெனு
முனிவன் பாத முளரியைப் போற்றியே
தனைய னந்தத் தலத்தினை யேத்தியே
யனைய போரடை யாளத்திற் போயினான்

22. வாவி யெங்கும் வளர்புண்ட ரீகமே
காவி யெங்குங் கரும்புண்ட ரீகமே
யாவி முற்று மலருறும் வாசமே
மேவி வைகுமி லிங்கத்தின் வாசமே.

23. முருகு யிர்க்கு முகிறருங் காமரம்
விரவி வண்டு மிழற்றுவ காமரம்
அரவ மேகலை யார்வண்ட லாரமே
புரிய கூந்தற் புனைவர்கல் லாரமே.

24. ஓதியே யொப்ப தொளிரும்விண் மாலையே
தாது சித்தத் தளிர்ப்பதீ மாலையே.
யாதரத் திக்கை யாட்டுறு மாலையே
மாத ருடலை மாற்றுறு மாலையே.

25. செருந்தி பூகஞ் செறிமலர்க் காவிடைப்
பொருந்து திங்கள் புகுந்து புகுந்துடல்
வருந்திச் செல்லுத லாலுக வண்டுதே
னருந்தி யுண்மகிழ்ந் தார்ந்தங் குலவுமே.

26. இவ்வ ளங்கண் டிளையோனு மாமுனி
கவ்வை தீரக் கழறிய வாய்மையிற்
பவ்வ வெள்ளம் பயந்ததேங் கூரது
செவ்வி தாமெல்லை சேர்ந்து களித்தனன்.

27. மான வெள்ளி மலையுறை நாதர்தந்
தேனு லாமலர்ச் சேவடி போற்றியே
ஞான மோங்க நவக்கிர கங்களா
லான லிங்க மனைத்தையும் போற்றினான்.

28. விரிந்த பூவும் விரைபுன லுங்கொடு
தெரிந்து நாடொறுஞ் செவ்விய பூசனை
புரிந்து நேசித்துப் புந்திநைந் தேயுளம்
பரிந்து போற்றினன் பல்கால் வணங்கியே.

29. எந்தை யெம்பெரு மானெம்மை யாளவே
வந்த வெள்ளி மலையுறை நாதன்றா
னந்த மார்க்கண்ட னாமென வாயுவே
தந்து வாழ்வுந் தருமமு நல்கினான்.

30. நன்றி தென்று நவக்கிர கங்களுஞ்
சென்று நின்றச் சிறுவனை நோக்கியே
யொன்று கேள்பதி னோரா மிடத்தியா
நின்ற மெய்ப்பல நீபெறு வாயென்றார்.

31. அலகில் கீர்த்தியு மாண்மையுஞ் செல்வமு
மிலக மன்ன ரிருபுறத் துந்தொழ
வலகி லிந்திர னொப்பெனக் காமுகர்
திலக னாகத் திகழ்தரு வாயென்றார்.



32. கொற்ற மேவு குமாரனு நல்வரம்
பெற்று நாதர் பிரசப்பொற் றாளினிற்
பற்று வைத்துப் பணிந்தே விடைகொடு
கற்று ணர்ந்த கவுசிகன் பால்வந்தான்.

33. கச்சு லாமுலைக் கன்னியர் காமுற்றே
மெச்சு மேனி விடலையுங் கோசிக
னச்சு பாத நளினம் பணிதலு
முச்சி மோந்தே யுவந்தொன்று கூறினான்.

34. நீய ரன்பத நேசித்து நல்வர
மேய வாறு விரைந்துணர்ந் தோமிந்த
பாயி ரும்புவி பாவ மகற்றினை
யாய மேன்மையோ டாளுதி நீயென்றான்.

35. அரசர் மெச்ச வரிந்தம னென்னவே
சாத மாம்பெயர் சார்ந்துநீ தந்தையா
விரவு சோதனும் வேந்த னவனுடன்
வரம் விளங்கவே வாழுதி போயென்றான்.

36. கோசி கன்றருங் கொற்றவில் வேல்கதை
யாசு கம்பெற் றடைதலும் பல்படைத்
தூசி யும்பல தூங்குகைக் குன்றமும்
வாசி யும்பல வந்து தற்சூழவே.

37. தெவ்வ ராகிய தேயத்து வேந்தர்கள்
பவ்வம் போலப் பரிந்து பணிந்திடச்
செவ்வி தாந்திருத் தேரின்மீ தேறியே
யவ்வ ரிந்தம னங்கநா டெய்தினான்.

38. அலகில் வேந்த னடையுமவ் வேலையி
லுலக மன்ன னொருவ னச்சோதனை
விலகி நாடு விடத்துரந் தப்பதி
யிலகிச் சேனை யிடஞ்சுற்ற வைகினான்.

39. அங்க நாட்டை யடல்கொண்டு வைகிய
தங்க வேந்தைத் துரந்துதன் ஞனையே
யெங்கு நாட்டி யிருந்துதன் றந்தையைத்
தங்கு தூதுவர் தம்மிற் றருவினன்.

40. தூதர் கண்டு தொழுதழைத் தேவரக்
காத லன்சென்று காலிற் பணிந்துநீ
தாதை கானிற் றனியே கிடத்திய
யேத மைந்தனும் யாரெனக் கூறினன்.

41. வேத நூல்விசு வாமித் திரனெனு
மாத வன்கண்டு வான்கருங் காட்டிடை
யேத நீங்க வெடுத்தே வளர்த்துப்பின்
சாத கத்தின் தகவுக் கிரங்கியே.

42. பொன்னி நன்னதிப் பூம்புன லூட்டினே
மன்னு வெள்ளி மலைநாதர் தம்மைய
முன்னர் கோட்கள் முழுமையும் பூசித்த
வின்ன நீர்க்கு மிலிங்கங்க டம்மையும்.

43. பூசை நீசெயிற் போமித் துயரெனுங்
கோசி கன்னுரை கொண்டுநான் போற்றியே
பேசு நல்வரம் பெற்றுல காண்டிடுந்
தேசு முற்றியித் தேயமுற் றேனென்றான்.

44. தனது காதலன் சாற்றிய சொல்லினல்
மன மகிழ்ந்துதன் மார்பிற் றழுவியே
வினவு கட்புனல் விட்டுச்சி மோந்துமற்
றினிமை யெய்தி யிருவரும் வைகியே.

45. தேய முற்றினுஞ் செங்கோல் செலுத்திட
வாய வாழ்வுதந் தாட்கொண்ட நாதனுர்
தூய பாதந் தொழுவே யிருவரும்
பாய நேயப் படைஞரோ டேகினர்.



46. வீறு மெல்லையை மேவி வணங்கியே
பேறி தென்று பெருமிதத் தின்மறை
கூறு மெழ்நிலைக் கோபுரம் போற்றிவிண்
ணுறு தோரங்கம்பத் தாண்டு வணங்கினர்.

47. முக்கண் வேழ முகவனைப் போற்றியே
புக்கு வேற்கைப் புலவனை வாழ்த்தியே
மிக்க கேயத்தின் வீறுஞ் சினகரப்
பக்க மாகப் புகர்வலஞ் செய்தனர்.

(வேறு.)

48. முற்றுபல் கோடி யண்ட முழுதுநல் லருளான் முன்னம்
பெற்றநா யகியை யெங்கள் பெரியநா யகியை வாழ்த்தி
யற்றுல களிக்கும் வெள்ளி மலைநாதர் திருமுன் னெய்திப்
பற்றுப நிடதத் தாலே பகர்ந்தனன் றுதிகள் மன்னே.

49. மதிபுனை சடையாய் போற்றி மதலையந் தொடையாய் போற்றி
கதிர்மதிக் கனலே போற்றிக் கண்கண் மூன்றுடையாய் போற்றி
பதுமவர்ச் சனைக்கே வேண்டும் பாக்கிய மளித்தாய் போற்றி
முதுமறை யோனு மாலு முற்றெரு முதல்வா போற்றி.

50. கரியுரி யுடையாய் போற்றி கறைமிடற் றமுதே போற்றி
யரியநல் வாழ்வே போற்றி யருமறைப் பொருளே போற்றி
வரியரா வரையாய் போற்றி வளர்மறிக் கரத்தாய் போற்றி
பெரியநா யகிதன் னேயப் பிஞ்ஞகா போற்றி போற்றி.

51. மெய்யர்நெஞ் சகத்தாய் போற்றி விரும்புவார்க் கெளியாய் போற்றி
செய்யமே னியனே போற்றி செழுஞ்சுவைக் கனியே போற்றி
துய்யபே ரொளியே போற்றி தொலைவிலாப் பொருளே போற்றி
வையகம் புகழும் வெள்ளி மலைநாத போற்றி போற்றி.

52. என்னவே புகழ்ந்து பல்கா லிறைஞ்சியவ் வூரின் வைகிப்
பொன்னிறற் சினக ரத்தைப் புதுக்கிச்சங் காற்கே யாய
நன்னெறி தரும் விழாவை நடத்தவே நாடி மேன்மைப்
பன்னரும் வீதி தோறும் பறையறை வித்தார் மன்னே.

53. தாரகை தொடும்பொன் மாடஞ் சாந்தினாற் றீற்றி யெங்குந்
தோரணம் வாழை பூகந் தூயபந் தரிலமைத்துப்
பூரண கும்பம் வைத்துப் புதுமலர்த் தாம நாற்றிப்
பாரக முழுதும் வாழ்த்தப் பதியலங் கரித்தா ரன்றே.

54. வட்குவ டனைய வான மதகரி முழக்கு மெங்கு
மடவிரு புரவி நின்றே யதிர்பெரு முழக்கும் வாசத்
தடமுலை மடவா ராடற் றண்ணுமை முழக்கும் வள்வார்
கடியதுந் துமி முழக்குங் கடலென முழங்கு மாங்கே.

55. குங்குமம் பனிநீர் சாந்துங் குழைத்திள முலைமேற் பூசி
மங்கைய ரளக மீதே வரிமலர் சூடி வாரும்
பைங்குழை யாரந் தோடு பருமணிக் கலாபஞ் செம்பொற்
சங்கவெள் வளைசி லம்பு தாமிவை யணிகு வாரும்.

56. கெடுங்கொடி வீதி தோறு நிறைந்தலங் கரிக்கின் றாரும்
விடங்கர்தந் தொண்டர்க் கன்பாய் விருந்தமு தூட்டு வாரும்
படங்களின் விதானிப் பாரும் பரிமள முலையின் னார்கள்
நடம்பயி லிடங்க டோறும் நாடக மெழுது வாரும்.

57. முத்தலங் கரிக்கின் றாரு முறைமுறை யாகி நின்றே
யெத்தனை விதங்க ளாலு மெங்கணுஞ் சிறப்புச் செய்யச்
சித்திரைத் திங்க டன்னிற் றிருவிழா நடத்த வேண்டி
யுத்தம மான நன்னா ளோரையை யுணர்ந்து கொண்டு.

58. மிருகசீ ரிடத்து முன்னாள் விடைக்கொடி யேற்றி யம்மை
பெரியநா யகிக்கு மெங்கள் பிரானுக்கு மத்த நாளி
னிரதநல் விழா நடாத்தி யியம்புசித் திரையி னல்ல
பருவமே கூடு நன்னாட் பரிந்துமஞ் சனமுஞ் செய்தார்.

59. இவ்வகைத் திருவி ழாவு மினிதென நடத்தி வைகி
யவ்வகைச் செங்கோல் வையத் தணிபெற நிறுவி வாழ்ந்து
நவ்வியங் காத்து வள்ள னயந்தசா ரூபம் பெற்றுச்
செவ்விதிற் சென்றோர் மீளாச் சிவபதஞ் சேர்ந்து வாழ்ந்தார்.



60. தலமென வாசஞ் செய்வோர் தமக்குமெம் பெருமான் பாதம்
நிலனுறப் பணிந்த பேர்க்கு நினைந்தொரு கணமுற் றோர்க்கும்
பலர்புகழ் கோன்க ளெல்லாம் பதினொரா யிடத்தி லுள்ள
நலனினி தளிப்ப ரெங்க ணாதனுங் கருணை செய்வான்.

61. கோசிகன் றலங்கள் கோடி கோடியிற் புதல்வன் றோடந்
தாசகற் றுதற்கிவ் வூரே யாந்தல மென்ன லாலே
மாசற நூறு சென்மம் வகுத்தபுண் ணியத்தார்க் கல்லால்
நேசமாய்ச் சென்று போற்ற நேருதற் கரிதீ தாமே.

62. சூதமா முனிவன் கூறத் தொழுந்தகை முனிவ ரெல்லா
மாதிநா யகர்தம் மேன்மை யன்புடன் வினவி யுய்ந்தோந்
தீதறக் கங்கை யெய்திச் செயுந்தவ முறையா யென்ன
வாதரா வுடனே கும்பத் தருண்முனி யறைய லுற்றான்.

அரிந்தமன் சருக்கம் முற்றிற்று.

---

## சிவகங்கைச் சருக்கம்.

1. அம்மைக் கமலக் கரவிரலா லன்றுபெருகுங் கங்கை யெங்கோன்
செம்மை முடியிற் பொறையுடனே திகழுங் கங்கை பகீரதனார்
மும்மை வினையும் விடக்கொணர்ந்த முழுநீர்க் கங்கை கொடும்பாவ
வெம்மை யகற்ற வுலகிலுள்ளோர் மேவிப் படியும் வியன்கங்கை.

2. புடவி மனிதர் விண்ணிலுள்ள புலவோ ரெவரும் வந்துவந்து
படிய வொழிந்து வருங்கொடிய பாவ மனைத்துந் தொடர்ந்தினி
விடுத லரிது புவிமுழுது மேவித் தீர்த்தங் களிற்படிந்தால்
நெடிது புகுந்த பாவமெல்லா நீங்குமெனவே நினைத்தெழுந்தான்.

3. வரையிற் றீர்த்தங் கடற்றீர்த்த மற்றும் புவியி லுளதீர்த்தம்
பரவிப் படிந்து தலங்கடொறும் பணிந்து பலநாட் டிரிந்ததன்பி
னூரனிற் றேய்ந்து கொடும்பாவ மொழிந்த தென்றென் றுன்னிந
[ன் னாள்
விரவப் போந்தான் திரிபதகை வெள்ளி மலைநா யகர்வலத்தில்.

4. உள்ளங் குளிர்ந்து ரோமமெல்லா முடனே புளகஞ் செய்தநுகண்
வெள்ளம் பரந்த தாநந்தம் விளைந்த தென்ன வாறென்றே
யெள்ளுங் கொடிய பாவமெல்லா மிழிந்த தலத்தை யினிதிறைஞ்சி
விள்ளுந் தமியேற் கெனநினைந்து மெல்ல நடந்தாண் மெல்லியலே.

5. எங்கள் பெருமான் சினகரத்தை யிறைஞ்சிப் பலகால் வலம்வந்து
சுங்கன் முதலோர் தம்மிலிங்கந் தொழுதஞ் செழுத்துந் துதித்தோதி
யங்க ணுறைந்து வடபுறத்தி லாநீர் வாவி தொட்டதனிற்
கங்கை கலந்து மூழ்கியென்றுங் கடவுள் பாதம் வணங்கினளால்.

6. தூய கங்கை யிருபோதுந் தொழுது போற்ற வெள்ளிமலை
நாய கன்ற னுளமகிழ்ந்து நாளு மெவரும் படிதலினு
லாய பாவ மகன்றதனை யடையா தந்தப் பாவமினிச்
சேய மலர்வா வியனுமுறை தினமு நீங்கா திவணென்றார்.

7. அன்று முதலா வான்கங்கை யலர்வா வியிலே வைகியங்கட்
சென்று படிந்தோர் நூறுசென்மஞ் செய்த பாவந் தீர்த்துமுதிர்
வென்றி விடையோன் சிவலோக மேன்மை யுதவி நிறைதலினு
லென்றும் வடபாற் சிவகங்கை யெனவே பெயரா யியைந்ததுவே.

8. விரத முணர்ந்தே யுபநிடத வேத முழுது மனவிட்ட
கருணை முனிவர் கவுதமனார் கன்னி செய்த பெரும்பாவ
மருவு துயர்க்கும் பன்னியிடம் வருவா சவற்குச் சாபமிட்ட
வெருவும்வினைக்குமுளமிரங்கி மெய்ஞ்ஞானக்கண்கொடுத்தவர்க்கு.

9. சீடருடனே வந்தெய்தித் திருத்தேர் மீது சதுர்த்தசியி
னீடு பெருமான் றிருத்தாளை நிலத்திற்பணிந்து புகழ்ந் தேத்தித்
தேட வரிய முதுகங்கா தீர்த்தம் படிந்து பூரணையி
லாடல்பயில்வோன்பதந்தெரிசித்தகன்றார்கொடும்பாதகமனைத்தும்.

10. தோற்றுங் கங்கா தீர்த்தமதிற் றோய்ந்தே முனிவ ரநேகர்பெறும்
பேற்றை யளவிட் டுரைப்பரிது பின்னர் தன்மர் முதலைவ
ராற்றல் கூருஞ் சிவகங்கை யாடி வெள்ளி மலைநாதர்
தோற்றமறுக்கும்பதம்போற்றித்திருவஞ்செழுத்துமுரைத்ததனால்.



11. வீடலில்லா வீடுமறை மெய்ந்நூற் றுரோணர் தமையன்றிக்
கூடு மடலா னூற்றுவரைக் கொன்று வென்று மீண்டுமன்பு
நீடுஞ் சிவகங் கையின் மூழ்கி. நெடிது கொன்ற பாவமெலாந்
தேடு நலம்பெற் றுடன்விடுத்துச்சிவலோகமும்பெற் றுய்ந்தாரால்.

12. மாக மாதம் பூரணையின் மருவுந் திருவா திரையதனி
லாகம் விளங்குஞ் சிவகங்கை யதனின் மூழ்கி யையனுக்குந்
தாக முடனே யுமைபெரிய தாய்க்கு மபிடே கஞ்செய்தா
லோகை மருவி நூறுகுலத் துள்ளோர் பெறுவர் சிவலோகம்.

13. அயனஞ் சங்க ராந்திமதி யலரி யரவந் தீண்டிடுநா
ளியலும் பருவ மமாவாசை யேத நீங்குஞ் சிவநிசியே
துயிலுந் தரங்கச் சிவகங்கை தோய்ந்து பரனைத் தெரிசிக்குஞ்
செயலோர் பாவம் பலதீர்ந்து சிவலோகத்தின் வாழ்வார்கள்.

14. மலடி மூன்று நாள்மூழ்க மைந்தர் பெறுவ ரோய்கொண்டோர்
பலரு முதையத் தின்மூன்று பகலு மூழ்கத் தீர்ந்துய்வ
ரிலகு பஞ்ச பாதகங்க ளேதுஞ் செய்தோ ரானாலு
மிலக மூன்று நாள்மூழ்கி னெழிலார் சிவலோ கம்பெறுவார்.

வேறு.

15. அத்தனா ரடியார்க் கோர்போ தன்னமே யளித்தா ராகி
லெத்தனை பாவஞ் செய்தா ரென்னினுந் தீருந் திண்ண
முத்தம மறையோர்க் கம்பொன் னொருதில மளவு நல்கின்
சித்தமே குளிர நூறு சென்மபா தகமுந் தீரும்.

16. நந்தன வனமிவ் வூரி னலம்பெற வைத்தா ராகி
யைந்துபூ பரமற் கேற்றி னைந்துபா தகமுந் தீரு
மிந்தமான் மியத்தைக் கேட்போ ரினிதென்று துதிப்போ ரியாருஞ்
சிந்தனை யொழிந்து தெய்வச் சிவபத மடைவ ரென்றார்.

17. பூதலம் வாழ்க மேன்மை புனை திருத் தேங்கூர் வாழ்க
மாதவர் மறையோர் வாழ்க வளர்சிவனடியார் வாழ்க
ஏதமில் தலத்தி லென்று மிருப்பவர் வாழ்க வாழ்க
நீதிகூர் மன்னன் வாழ்க நீண்மகம் வாழ்க வாழ்க.

18. வரந்தரும் பொருளாம் வெள்ளிமலையிறை திருப்புராணம்
பரிந்தரங் கேற்றுவித்த பலர்களும் வாழ்க வாழ்க
இருந்திவை நன்று நன்றென் றிருசெவி குளிரக் கேட்போர்
பொருந்தவே செல்வம் பெற்றுப் புவியினில் வாழ்க வாழ்க.

சிவகங்கைச் சருக்க முற்றிற்று.

---

ஸ்ரீ பெரியநாயகியம்மை சமேத வெள்ளிமலைநாதர் துணை.

வெள்ளந்தாங்கிப்பிள்ளையார் துணை.

செல்வவிநாயகன் துணை.

ஆகத்திருவிருத்தம், 201.

---

உ

திருச்சிற்றம்பலம்.

# புராணவரலாறு.

ஆதியில் மனத்தில் நினைத்தவற்றை முடிக்குங் கங்காநதித் துறையாகிய மணிகர்ணிகா கட்டத்தில் விதிப்படி ஸ்நாநானுஷ்டானுதி நித்திய கருமங்களை முடித்து வினைப்பெருக்கனைத்தும் தீர்த்தருளாநின்ற ஸ்ரீகாசிவிசுவேசப்பெருமானது திருச்சந்நிதானத்தில் பிளங்கும்படியான முத்திமண்டபத்தில் நினைத்தற்கரிய சமதக்னி முனிவர், பராசரமுனிவர், வசிஷ்டமுனிவர், விசுவாமித்திர முனிவர், சௌனகர், பாரத்துவாசர், கௌதமர், பிருகு, அத்திரி, கோசிகர், காசிபர், நாரதர், சனகர் முதலாகிய பெருமைபொருந்திய தபோதனர்கள் யாவரும் கூடி ஸ்ரீகைலாஸபதியின் திருவருளினாலே பொதியமாமலையில் எழுந்தருளியிராநின்ற அருமையான தவத்தைச்செய்யும் அகத்திய மகாமுனிவரை ஒரு சிம்மாசனத்தில் எழுந்தருளச்செய்து அர்க்கியபாத்திய முதலான சோடசோபசாரத்தோடு பூஜித்து நேசித்துத் தோத்தரித்துத் திருவடிகளில் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்துக் கரியவிசாலமாகிய கண்ணிணையுடைய உமாதேவியாரை இடது பாகத்திலுடைய சிவபெருமான் எழுந்தருளி இராநின்ற கைலாயகிரிக்குச் சமானமாயஸ்தலம் இப்பூமியின்கண் இருக்குமானால் அத்தலத்தின் மகிமையைத்தேவரீர் திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்று கேட்க நமது குருமுனிவரானவர் கேட்டு ஆனந்தமுற்று, அம்முனிவர்களைப் பார்த்து, அருந்தவத்தை யுடையவர்களே நீங்கள் கேட்டது நல்லது. இப்பூமியில் ஓர் தலம் இருக்கின்றது. அத்தலமானது கைலாயகிரிக்குமேலானது அதன் மகிமையை இன்று சொல்ல அரிதாயிருந்தாலும் எனக்குத்தெரிந்தவாறு உரைக்கின்றேனென்று திருவாய் மலர்ந்தருளுகின்றார். சிவபெருமானிடத்தில் ஒருமைப்பாடுடைய மனத்தையுடைய முனீந்திரர்களே அச்சிவபிரானெழுந்தருளி இராநின்ற ஸ்தலங்கள் பலகோடியாம். அத்தலங்களுக்குள் இத்தலத்திற்கு இணையான தலமுமில்லை. அல்லாமல் உயர்ந்ததலமுமில்லை. பெரிய முத்துக்களை அலைகளானவைகொழித்து மேகங்களும் பயப்படும்படியாக இரைந்து அதில் மரங்களின்வேரை அகழ்ந்து வீசும்படியான பொன்னிநதியினது தென்பாரி

சத்தில் தேவர்களெல்லாம் துதிக்கத்தக்க தலங்களாகிய திருக்குடந்தை திருக்கலயநல்லூர், திருச்சேறை, திருவிடைமருதூர், திருவாவடுதுறை உயர்வாகிய கௌரிமாயூரம், சோலைகள் நெருங்கும்படியான திருக்கடவூர், நினைத்தற்கரிய திருநள்ளாறு, வாவிகள் சூழும்படியான திருப்புகலூர், திருவிற்குடி, திருமுக்கூடல், சிறப்புற்ற நாகைக்காரோணம், சிக்கல், கீழ்வேளூர், தேவூர், நிறைந்த புகழினையுடைய திருவாரூர், நீர்நிறைந்த திருக்குவளை, திருவாய்மூர், தருமஞ்சேர்ந்த நல்லவலிவலம், கன்றாப்பூர், திருக்காறாயில், திருஉறைந்தைப்பதி, கச்சினம், கோட்டூர், உயர்வாகிய திருக்கொள்ளிக்காடு முதலாகிய அநேக சிவஸ்தலங்களுள்ளன. அவற்றுள் திருக்கொள்ளிக்காட்டிற்குக் கீழ்த்திசையில் பிர்மா, சூரியன் முதலாகிய தேவர்கள் வணங்கவரும்படியான திருநெல்லிக்காவுக்கு நிருதிமூலையின்கண் சந்திரிகை வீசும்படியான மூன்றாம்பிறைச் சந்திரனைத் தரித்த ஜடாபாரத்தையுடைய சிவபிரான், உமாதேவியாருடன் நீங்காது எழுந்தருளி இருந்து தேவர் முதலியோர் பலரும் பூஜித்து வணங்க எக்காலத்தும் வேண்டிய வரங்களை விரும்பி அளித்தருளாநின்ற தலம் இத்திருத்தேங்கூராகும், என்று அகத்தியமகாமுனிவர் திருவாய்மலர்ந்தருளினார். அம்முனிகணத்து விளங்கும்படியான சௌனகமுனிவர் அகத்தியமகாமுனிவரைப் பார்த்து தேவரீர் அடியேங்களுக்கு மனதினாலும் உணரமுடியாத இச்சிவசரித்திரத்தைத் திருவாய்மலர்ந்தருள்க்கேட்டு மிகுந்த பாவங்களினின்றும் நீங்கினோம். இனி கோபம் பொருந்திய மூன்றிலைபோல் விளங்காநின்ற வேலாயுதத்தைத்தரித்த சிவபிரான் விரும்பும் இத்தலமானது, சிந்துநிரோதபுரம் என்று மனங்குளிர உரைக்கும்படியான பெயர் வந்த வரலாற்றைத் தேவரீர் மகிழ்ந்து திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று கேட்டார். அதுகேட்டு அகத்தியமகாமுனிவர் விளங்கும்படியான பதினெண்புராணத்துள் பிரகாசிக்கும் ஸ்காந்தபுராணத்தில் பூமியிலுள்ளோர் புகழாநின்ற சநற்குமார சங்கிதையில், மெய்ஞ்ஞான நெறியினைச் சொல்லாநின்ற உபரியாகத்தில் சொல்லப்பட்ட தெய்வத்தன்மை பொருந்திய இத்தலமான்மியத்தை நம்முடைய குருவாகிய ஸ்ரீ சுப்பிரமணியக்கடவுள் திருவாய்மலர்ந்தருளிய வண்ணம் உரைக்கின்றேனென்று திருவாய்மலர்ந்தருளுகின்றார்.

புராணவரலாறு முற்றிற்று.

---



## 2. தலவிசேடச் சருக்கம்.

அநேக யுகங்கள் சென்று வரும்படியான ஒரு கற்பாந்தகாலத்தில் நீங்கற்கரிய நான்கு திக்கிலும் சூழ்ந்திராநின்ற வெள்ளிய அலைகளையுடைய சமுத்திரங்களானவை மேன்மேலும் இப்பூமி எல்லாம் முழுகும்படிப் பொங்கி முத்துக்களைவீசி அஷ்டதிக்குகளிலும் பரந்து கிளைகளோடுகூடிய காடுகளிலுள்ள கொடிகளின் வேர்களைப்பறித்துச் சிதறி இனிமையாகிய நடையினையுடைய ஆட்டுக்கிடைகளிற்பாய்ந்தும் வலிமையாகிய முகத்தினையுடைய கலைமான்களைப் பிளந்து படர்ந்த கொடிகளினது பூங்கொத்துகளில் உயர்ந்து விளங்கும்படியான சூரியனது கூட்டங்களென்று சொல்லும்படி நெருங்கிய பளபளப்பாகிய மாலைபோல் விளங்கும்படியான சிவந்த தேனருவிகளானவை தாழ்ந்து எவ்விடத்தும் சூழ நடனஞ்செய்கின்ற மயில்களானவை அஞ்சும்படி வேர்களைப்பறித்து மோதிவரும்படியான வெள்ளத்தில் இராநின்ற சுறாமீன்களானவை பாய்ந்து, பலாக்கனி இனிமைபொருந்தியதே மாமரத்தோடு பாக்குக்குலையையும் தென்னங்குலையையும் உதிர்ப்ப மலையைப்போன்ற மதத்தைப் பொழியும்படியான கபாலத்தையுடைய யானைகளும் அக்கினியைக் கக்கும்படியான மதர்த்த கண்களையும் பிளந்த வாயினையுமுடைய பெரிய மலையினையொக்கும் சிம்மக்குட்டிகளும் பிரவாகத்தில் மூழ்கவும் சமுத்திரத்திற் பிறந்த வெவ்வியகண்களையுடைய யானைபோன்ற முகத்தினையுடைய மகரமீன்களோடும் வலிமைபொருந்திய மலையிலுள்ள பன்றி வாசிமுதலிய மிருகங்கள் சேரவும் சமுத்திரத்தில் சஞ்சரிக்கும்படியான திமிங்கலமே முதலாயுள்ள அனேகவிதமான மீன்கூட்டங்களெல்லாம் ஆகாயத்தில் நக்ஷத்திரமென்று சொல்லாநின்ற மீன் கூட்டங்களோடு கலந்து அதிசயத்தைச் செய்யவும் மடவை சுறா உல்லம் மகரம் திருக்கை சிவி வலிமைபொருந்திய கொடுவாய் காலை வெண்மை பொருந்திய இறால் சிறகி வௌவால் வலிமைபொருந்திய ஓங்கில் பாரை அருமையாகிய பனைமீன் முதலாகிய சமுத்திரத்திலுள்ள மீன்கள் நாட்டிலுள்ள மீன்களோடு கலந்து ஆகாயத்திற்பாய்ந்து எட்டுதிக்குகளும் பரந்து நிறைந்து மேகமண்டலத்திலும் நிறைந்து தாமரைமலரினை மலர்த்தும் சூரியமண்டலத்திலும் நிறைந்து நெருங்கிய வெள்ளியசந்திரமண்டலத்திலும் மற்றுள்ள தேவர்கள் வசிக்கும்படியான நாடுகளிலும்

நிறைந்து தெளிந்த அலைகளிலிருந்துண்டாகிய நுரைகளை வீசித்திசைகளெல்லாவற்றையுங்கொண்டு செல்லும்படி மிகுந்த பெருக்கையுடையதாகி எல்லா உலகங்களிலும் பிரளயவெள்ளமானது பரவ நெருங்கிய அநேகங்கோடி அண்டங்களிலும் நிறைந்து அவ்வண்டங்களில் வசிக்கும் உயிருக்குயிராய் விளங்கும்படியான கிருபாமூர்த்தியாகிய சிவபிரான் தனது இடதுபாகத்தில் நீங்காதிராநின்ற உமாதேவியாரோடும் மகிழ்ந்து பெருமை பொருந்திய வெள்ளியங்கிரியில் எழுந்தருளி இருந்து எட்டுத்திக்குகளும் முழுகும்படியான வெள்ளம் எழுந்து வருவதை நோக்கி திருவாய்மலர்ந்தருளுகின்றார். இவ்வெள்ளியங்கிரியின்கண்ணே அன்புமிகுந்து உமாதேவியாரோடிருக்கின்றோம் அல்லாமல் நம்மடியார்களும் அநேகர் இப்பதியின்கண் வந்திருக்கின்றார்கள். ஆதலால் இத்தலத்தில் வெள்ளங்கொள்ளக்கூடாதென்று பூங்கொத்துக்களையுடைய மலர்ந்த கடம்பமாலையைச் சூடி பகையாகிய க்ரௌஞ்சகிரியைப்பிளந்த வெற்றிப்பாட்டினையுடைய வேலாயுதத்தைத் தரித்த முருகக்கடவுளை மேற்றிசையைக் காக்கும்படி வைத்தருளினார். விளங்கும்படியான ஒப்பற்ற கொம்பினால் மகாபாரதத்தை மகாமேருகிரியில் எழுதியருளிய தியானத்தில் விளங்காநின்ற பவளம்போன்ற மேனியையுடைய விநாயகக்கடவுளை கீழ்த்திசையிற் காக்கும்படியாக வைத்தருளினார். தமதுளம் மகிழாநின்ற பரிகலத்தின்கண்ணேகூட உண்டு தன்னுடைய ஜடாபாரத்திலும் சூடியிராநின்ற வளர்ந்த மாலையைத் தரித்தருளிய அபிமானபுத்திரராகிய சண்டேசுரரை வடதிசையிற் காக்கும்படி வைத்தருளினார். தன்னிடத்தில் வந்த சனகர் முதலாகிய நால்வர்களுக்கும் ஞானசமுத்திரத்தில் உண்டாகிய சிவபோகாமிர்தத்தைத் தந்தருளிய தெக்ஷிணாமூர்த்தியைத் தென்திசையில் காக்கும்படி வைத்தருளினார். இவ்வாறு வைக்கவே மிகுந்த பெரிய சுழிகளையுடைய வெள்ளமானது பயந்து சூழ்ந்து தேங்கி பக்கத்திலுள்ள நாடுகளெல்லாவற்றிலுங்கொண்டு சுற்றுமதில் மட்டுமுயர்ந்துவிட்டது. இவ்வாறு பெருகிய பிரளயவெள்ளத்திற்குப் பயந்த தேவர்கள் பஞ்சேந்திரியங்களையு மடக்கித் தவஞ்செய்யும் முனீந்திரர்கள் கானம்மிகுந்த கருடர்கள் சித்தர்கள்பயந்து வந்து சேர்ந்தார்கள். விருப்பம் பொருந்திய மனதினையுடைய ஒழுக்கத்தில் மிக்க அன்புபொருந்திய நல்ல அடியார்கள் யாவரும் வந்து சேர்ந்தார்கள். அடைக்கல



மென்று வந்தவர்கள் யாராயிருந்தாலும் அவர்களு மித்தலத்தில் வந்து சேர்ந்தே பிழைத்தார்கள் வடவாமுகாக்கினியையும் அவித்து பெரிய வரைகளையுருட்டி யுயர்ந்த பூமியை நிறைத்து ஆகாயத்திற் சஞ்சரிக்கும்படியான மேகஜாலத்தையும் முகந்துகொண்டு எழுந்த பெரிய வெள்ளமானது நெருங்கிய நான்கு திக்கிலும் பத்துக்குரோசத்தளவுக்கப்பால் நீங்கி நிற்க பரந்த தேனையுடைய தாமரை மலரில் வசிக்கும்படியான பிர்ம்மதேவரும் மகாவிஷ்ணுவும் விரும்பிப்பார்த்து ஆச்சரியத்தையுடையவர்களாகி நின்றார்கள். நெருங்குதற்குரிய வெள்ளமானது பயந்து தடுக்கப்பட்டு நிற்றலாலே நிறைந்த வலிமையையுடைய சிந்துநிரோதமாநகரமென்று விரும்பும்படியான பேரையுடையதாயிற்று. தெளிந்த நீரையுடைய வெள்ளமானது மிகவுந்தேங்கி நின்ற காரணத்தால் வலிமையைத் தரும்படியான திருத்தேங்கூர் என்று ஒப்பற்ற பெயரையுடையதாயிற்று. எல்லாத்தலங்களிலும் பிரளயவெள்ளமானது கொண்டாலும் இத்தலத்திற் கொள்ளாதென்று அத்திருத்தேங்கூரினை விரும்பித் தேவர்களெல்லாரும் வந்துசேர்ந்தார்கள். சித்தர் முதலிய யாவரும் எட்டுத்திக்குகளிலுமுள்ள பக்தர்களெல்லாரும் வந்தடைந்தார்கள். யாவருக்கும் அப்பதி இடங்கொடுத்தது. உலகங்களுக்கெல்லாம் பிதாவாயுள்ள சிவபிரானெழுந்தருளியிராநின்ற ஸ்தலம். ஆயிரங்கோடிக்கு மேலுமிருக்கின்றதே இத்தலம்போல் பொருந்திய வெள்ளிய கைலையங்கிரியில் நிர்மலராகிய சிவபெருமானெழுந்தருளியிருக்க ஆகாயமும் பரந்த பெரிய பூமியுங்கொண்ட சமுத்திரத்தையுமுண்ட பெருவெள்ளமானது மாயையைப்போலச் சூழ்ந்து பயந்து நிற்கும்படியான ஸ்தலங்களுமிருக்கின்றதோ இல்லை கோபித்து உலகங்களையெல்லாமுண்ட பெரியவெள்ளமானது தேங்கி சூழ்ந்து ஒதுங்கி நிற்றலாலே மறித்துக்கொண்டு காலதூதர்கள் செய்யும்படியான வஞ்சக வேதனையுமில்லை. ஞானமுண்டாக சிவலோகத்தையுங் கொடுக்கும். இது சத்தியமென்று இந்தத்தலத்தில் வந்து பிறக்கத் தேவர்களெல்லாம் பெருந்தவஞ் செய்வோமென்று எண்ணுகிறார்கள். யாவராலும் விலக்கற்கரிய கற்பாந்த வெள்ளமானது விலகிய திருத்தேங்கூரைப் பயனுறும்படியாக நினைப்பாராகில் செய்த பாதகமுழுமையும் நீங்கும். இத்

தலத்தினை ஒருதரம் மிதிப்பாராகில் சாரூபபதவி கிடைக்கும். எப்பொழுதும் விளங்கும்படியாக வாசஞ்செய்வோர்கள் அடையும் பெரிய பதவிக்கு அளவுமுண்டோ. வேறொரு ஸ்தலத்தினின்றும் பிரயாணம் போகின்றவர்கள் தூரத்தே இருந்தேனும் வெற்றியையுடைய சிவபெருமானது எதிரே நிற்கும்படியான திருக்கோபுரத்தைத் தரிசிப்பாராகில் ஞானத்தைத்தரும்படியான வேதத்துக்கும் எட்டாத சிவலோகத்தைச்சேர்வார்களென்றால் அன்போடு இத்தலத்திற்கு வந்து விதிப்படி சிவபிரானைத் தரிசிப்பவர்கள் அடையும் மேலான பதவிக்கு அளவுமுண்டோவென்று உயர்ந்த பெரிய பிரளயத்தைத் தடுத்தருளிய மான்மியத்தைத் திருவாய்மலர்ந்தருள சௌநகர் முதலாகிய தபோதனர்களெல்லாரும் மகிழ்ந்து தேவரீர் இச்சிவ சரித்திரத்தைத் திருவாய்மலர்ந்தருளக்கேட்டு கொடிய வினைகளினின்றும் நீங்கினோம். இன்னும் யாவரும் உய்யும்படி ஒரு கதை உரைத்தருளவேண்டும் அதாவது வெள்ளியங்கிரியானது இவ்வூரில் வந்த விதமும் அவ்வெள்ளியங்கிரியில் எங்கள் தலைவராகிய சிவபெருமான் உமாதேவியாரோடும் வந்து எழுந்தருளிய மான்மியத்தையும் அடியேன்களுக்கு உள்ளபடி திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று கேட்க சூதமகாமுனிவர் வேதாந்தமாகிய உபநிடதத்திலுள்ள தெளிவாகிய பொருள்களெல்லாவற்றையும் திருவாய்மலர்ந்தருளுகின்றார்.

தலவிசேடச்சருக்கம் முற்றிற்று.

## 3. வெள்ளிமலைச் சருக்கம்.

அண்டங்களெல்லாவற்றையும் தமது ஆஞ்ஞாசக்கரத்தினால் அடக்கிக் காக்கின்ற ஒப்பற்ற மேகம்போன்ற திருமேனியினையுடைய மகாவிஷ்ணுவினுடைய மனதையும் உருக்கும்படியான அழகையுடையவளும் தாமரைப்புஷ்பம் மலர்ந்த கொடிபோன்றவளும் முத்தினையொத்த நல்ல நகையை யுடையவளும் ஒளிபொருந்திய வளையலைத் தரித்தவளும் திருப்பாற்கடலில் அமிர்தத்தினுடன் பிறந்த தன்மையையுடையவளுமாகிய லக்ஷ்மிதேவியானவள் மனதில் அருளைப்பெருக்கி



தான்கடைநோக்கம் செய்திடும் மேன்மையினால் யாவருக்கும் நல்லவாழ்வை எக்காலத்திலும் மிகவே கொடுக்கின்ற இத்தன்மை வேண்டுமென்று தனது நாயகனாகிய விஷ்ணுமூர்த்திக்கு இனிமையாகத் தெரிவித்து உத்தரவு பெற்றுக்கொண்டு வைகுண்டத்தினின்றும் நீங்கிப் பூலோகத்திற்கு வந்தனள். எனது தந்தையாகிய பரமசிவனை இருதயகமலத்தின்கண்ணே தியானித்து எக்காலத்திலும் தவஞ்செய்யத்தக்கதாகிய ஸ்தலம் முடிவில்லாதபூமியினிடத்து எதுவென்று தேடிப்பார்த்துக்கொண்டு செல்லுகின்ற காலத்தில் இந்த ஸ்தலத்திற்கு வந்து சேர்ந்தாள் இதினுடைய சிறப்பினைப் பார்த்தாள் சரீரமெல்லாம் புளகங்கொள்ள ஆனந்தத்தைச் செய்கின்ற இத்தலமானது தவஞ் செய்தற்குத் தகுந்ததென்று நினைத்து லக்ஷ்மிதேவியும் விரும்பி இந்த ஸ்தலத்தின்கண்ணே எழுந்தருளி இருந்து நெருங்கிய மிகுந்த பலத்தினையுடைய கருடனை நினைத்தனள், உடனே மலைகளினுடைய அடிகளெல்லாம் பெயரும்படி பரந்து அஷ்டதிக்குகளிலும் வாசனையை வீசிக்கொண்டு கருடனும் வந்து கமலாசனத்தில் வசிக்கும்படியான லக்ஷ்மிதேவியினுடைய இரண்டு திருவடிகளையும் வணங்கி இன்று அடியேன் செய்யும்படியான அழகிய கிருபாமயமாகிய பணிவிடையைத் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று கேட்டனள். ஆதியாயுள்ளவரும் யாவராலும் இத்தன்மையினின்று அளவிட்டுச் சொல்லமுடியாதவரும் நிர்மலமாகிய ஞானசரீரத்தை உடையவரும் மேலே இருக்கும்படியான எல்லா அண்டங்களிலும் வியாபியாயிருந்தருளும்படியான தலைவருமாகிய சிமபெருமானைத் தவத்தினால் நான் தரிசித்து ஒரு வரத்தினை பேதைமை பொருந்தாவண்ணம் அடையவேண்டும். இத்தலமானது கிடைத்தது எனது புண்ணியவசம். ஆதலால் சகலதேவருக்கும் முதன்மையாயுள்ள சிவபெருமானெழுந்தருளி இராநின்ற கைலாயகிரியில் பலவகையான தகுந்த கொடுமுடிகள் ஆயிரத்தெட்டுண்டு. அவைகளில் ஒரு கொடுமுடியை சிவபிரானருளால் வாங்கிக்கொண்டுவந்து இவ்விடத்தில் தருவாயென்று திருவாய்மலர்ந்தருளலுமுடனே கருடன் லக்ஷ்மிதேவியினுடைய திருவடிகளை வணங்கி விடைபெற்றுக்கொண்டு அவ்வாறே கொண்டுவரக் கருதி அவ்விடத்தினின்றும் நீங்கிப்போய் நம்முடைய மானினைத்தரித்த அழகிய கரத்தினையுடைய சிவபிரானெழுந்தருளியிராநின்ற அழகிய பெரிய

கைலாஸகிரியினைத்தரிசித்தான். அக்கைலாயகிரியானது ஆயிரங்கோடிக்கு மேலான சந்திரர்கள் ஆகாயத்தில் உதயமாய் கிரணங்களையுடைய சந்திரிகை வீசுகின்றதென்று சொல்லும்படி பெரிய பூமியும் ஆகாயமும் எட்டுத்திக்குகளும் பரிசுத்தமாகிய பல அண்டங்களும் சென்று குளிர்ந்த கிரணங்களை வீசுதலையும் பலபல விதமாகிய மலையாடுகள் பாயுந்தோறும் மரக்கூட்டங்களில் நிறைந்த தேன் கூடுகளானவை குதிகொண்டு சிதறிய நன்மை நிறைந்த தேன் கூண்டுகளை விரல்களின் நகத்தினால் கிள்ளி பாணர்கள் தங்கள் கையிற்கொண்டு உண்ணும்படியான காக்ஷியையும் தென்னங் குரும்பை போன்ற ஸ்தனங்களின் மேல் குளிர்ச்சியைச் செய்து விளங்கும்படியான குங்குமங்கள் நிறைந்து உள்ளே மூழ்கலும் நிறங்கள் வேறுபட்டு வலிமை பொருந்திய பெருங் கற்கள் பெயர்த்து ஓடும்படியாக அழகு பொருந்திய அரம்பையர்கள் மூழ்குகின்ற வலிய அருவிகளையும் நெருங்கிய வாசம் பொருந்திய சந்தனமரங்களில் அசையாநின்ற பொன்மயமான கொடிகள் படர்தலினால் குளிர்ந்த நிழலைப்பரப்புகின்ற இடங்களில் மதம் பொருந்திய யானைக்குட்டிகளும் மான்கன்றுகளும் கோபித்துத் தொடரும்படியான புலிக்குட்டிகளும் சேர்ந்து நித்திரை செய்தலையும் கோடுகள் நிறைந்த நாகங்களினால் கக்கப்பட்ட சிவந்த மாணிக்கங்களும் கொடிய போரைச்செய்யும்படியான யானைகளினது கொம்புகளினின்றும் முன்னே பொழியும்படியான முத்துக்களும் கற்பகச் சோலைகளின் நிழலில் விரிந்த சூரிய கிரணத்தோடு சந்திர கிரணத்தை வீசுதலையும் பார்த்தான். சமீபத்தில் சென்று நின்று வணங்கி நமது தந்தையாய் விளங்கும்படியான நீலகண்டத்தினையுடைய சிவபிரானை மனத்தில் தியானித்துக்கொண்டு பிழைத்தலைத் தரும்படியான ஒரு கொடுமுடியைப் பிடுங்கிக்கொண்டு அன்பினைச்செய்து உலகங்களையெல்லாம் காக்கும் லக்ஷ்மிதேவிமுன் கொண்டுவந்து அந்தக் கைலாயகிரியின் கொடுமுடியை வைத்தனன். அத்தலத்தில் அக்கொடுமுடியானது பாரம் பொருந்த அழுந்தி நின்றது. முத்தைப் போன்ற இனிமையான நகையினையும் தாமரைமலரினையொத்த முகத்தினையுடைய கொடிபோன்ற லக்ஷ்மிதேவியானவள் விரும்பிப்பார்த்தனள். மனங்குளிர்ந்தனள். நிர்மலராகிய சிவபிரான் வந்து அடியே



னைப்பயப்படாதேயென்று திருவாய்மலர்ந்து கிருபை செய்யுமென்று மிகுந்த அன்புகொண்டு மேலான பஞ்சாக்ஷரத்தினைக் கீறி சிதம்பர மகா யந்திரத்தினைக் குறைவுறாமல் எழுதிவைத்து இதில் வெள்ளியங்கிரியின் எதிராக எழுந்தருளியிருந்து உமாதேவியாரை இடது பாகத்திலுடைய சிவபிரானை இருதயகமலத்தில் தியானித்து அருமையாகிய தவத்தினைச் செய்தனள். அவ்வாறு தவஞ்செய்யாநின்ற தாமரைமலரிலெழுந்தருளியிருக்கும் திருத்தமாகிய ஆபரணத்தைத் தரித்த லக்ஷ்மிதேவியினது அன்பினைத் தெரிந்து உடனே விரிந்த சிவந்த ஜடாபாரத்தையுடைய சிவபிரான் விரஷபவாகனத்தில் சந்திரனைப்பார்க்கிலும் மிகுந்த சந்திரிகை வீசும்படியான வெள்ளியங்கிரியின் மேல் உதயமாகிய சூரியனைப்போல் வெள்ளிய மூன்றாம் பிறைச்சந்திரனானவன் தேன் பொருந்திய கொன்றை மாலையைத் தரித்த ஜடாபாரத்தில் விளங்கவும் ஒளி பொருந்திய நாகங்கள் புதிய தோள்களின்மீது தோள்வளையல்களைப்போல் விளங்கவும் தமது உந்தியாகிய தாமரை மலரினின்றும் சகல அண்டங்களையும் பெற்றருளிய தலைவியாகிய உமாதேவியும் இமயமலையிற் பிறந்த பசிய தோள்வளையல்களைத் தரித்த அழகையுடையவளுமாகிய உமாதேவியார் ஒருபாகத்தில் விளங்கவும் வெள்ளிய சந்திரவட்டக்குடையினை முதன்மையாகிய குண்டோதரன் முறைமையால் தாங்கவும் இரண்டு தென்னங்குரும்பையைப்போல் பெருத்த ஆபரணங்களைத்தரித்த தனபாரங்களையுடைய அரம்பாஸ்திரீகள் சாமரைகளைப் பக்கத்தில் நின்று வீசவும் வண்டுகள் நெருங்கிய கட்டப்பட்ட சுருங்கிய கூந்தலையுடைய தேவஸ்திரீகளோடும் விரும்பும்படியான கின்னரர்கள் பலர் வீணைகள் பாடவும் பக்கத்தில் நெருங்கி தேவதுந்துபிகள் கறுத்த சமுத்திரத்திலுள்ள வெள்ளிய அலைகளைப்போல் வரிசையாய் நின்று சப்திக்கவும் பெருத்த கூட்டங்களையுடைய தேவர்களெல்லாங் கூடிவரவும் நாற்றிசையினின்றும் வரும்படியான குள்ளமான பூதங்கள் பெருத்த மலைகளைப்போல நெருங்கவும் ஆயிரங் கைகளைக்கொண்டு உருகி பாணாசுரன் உயர்ந்த குடமுழாவென்னும் வாத்தியத்தினை வாசித்துக்கொண்டு வரவும் தோத்தரித்து பிரம்பினைத் தாங்கி வந்திராநின்ற யாரையும் வரிசை பொருந்தும்படி நந்திகேஸ்வரரானவர் இருபுறத்திலும் நிறுத்திக்கொண்டு நிற்கவும் பல

விதமான ஒளிகளைத் திசைகள்தோறும் வீசாநின்ற முத்துக்களால் செய்யப்பட்ட சந்திரிகை வீசும்படியான பந்தரில் நிர்மலமாகிய சிவபிரானெழுந்தருளலும் தேவர்கள் யாவரும் புஷ்பமாரி பொழிந்தார்கள் அன்போடுகூட லக்ஷ்மிதேவியானவள் எழுந்து நமஸ்கரித்து தரிசித்து ஆனந்தபரவசத்தை யுடையவளாய் நித்தியமாயுள்ளவனே நமஸ்காரம் நல்ல பூமியும் அப்பூமியிலுள்ள சராசரங்கள் யாவுமாய் விளங்கும் ஞானஸ்வரூபனே நமஸ்காரம் ஒப்பற்ற உமாதேவியாருடைய பாகத்தில் விளங்கும்படியான முத்தனே நமஸ்காரம் தேவர்களுக்கெல்லாம் முதல்வனாயுள்ளவனே நமஸ்காரம் என்னுடைய பிதாவே நமஸ்காரம் என்று பலவிதமாக வாழ்த்தி வணங்கிக்கொண்டு நின்றனள். அக்காலத்தில் சிவபிரான் அந்த லக்ஷ்மிதேவியாரை அன்பினோடு கிருபாநோக்கஞ் செய்து இனி நீ வேண்டியவரங்களைச் சொல்வாயென்று திருவாய் மலர்ந்தருளலும், லக்ஷ்மிதேவியானவள், மற்ற யாவர்களும் என்னுடைய கடைநோக்கத்தினால் அஷ்ட ஐஸ்வரியங்களையும் அடைய வேண்டும் அப்பனே இவ்வரத்தினைக் கிருபைசெய்தருள்வாயென்றனள். அவ்வாறே எமது சிவபிரான் தமது திருக்கரத்தை வைத்து பூமியிலும் தேவலோகத்திலுமுள்ள யாவரும் நீ அன்பாக உளத்தில் நினைத்த மாத்திரத்தில் அவரவர்களுக்கு வேண்டிய செல்வத்தையடைவார்கள். என்று திருவாய் மலர்ந்தருள முன் பொருந்திய அடியினையும் பசிய பூங்கொத்தினையும் மிகுந்த வாசனையையுமுடைய தாமரைமலரில் வசியாநின்ற சிவந்த லக்ஷ்மிதேவியானவள் சரீரமெல்லாம் சிலிர்க்கும்படியாக மகிழ்ந்து அளவில்லாத திருவிளையாடல்களையுடைய சிவபிரானது திருவருளை நோக்கி இன்னமும் ஓர் வரங்கொடுத்தருளவேண்டுமென்று அவ்விலக்ஷ்மிதேவியானவள் சொல்கின்றாள். மலமில்லாதவனே இவ்விடத்தில் நிலை பெற்ற கிரணங்களோடுகூடிய பிரகாசமானது விளங்கும்படி அழகினைச் செய்யும்படியான நின்னுடைய திருவுருவானது பிரகாசமாய் நிறைந்திருத்தல்வேண்டும். பெருமை பொருந்திய இத்தலத்தினை மிதித்தபேரும் அசையும்படியான ஒளியினையுடைய பிரகாசமாகிய தேவரீருடைய சுயம்புலிங்கத்தைப் பயன் பொருந்தும்படியாக ஒரு நாள் வணங்கின பேர்களும் உயர்ந்த சிவலோகமே அடையவேண்டும். என்று வரம்வேண்டலும் அவ்வாறே



இசைந்து அச்சிவபிரான் அந்த வெள்ளியங்கிரியில் மன மகிழும்படியான சுயம்புமூர்த்தியாய் வந்து தோன்றலும் பார்த்து தரிசித்து தாமரைமலரில் எழுந்தருளியிராநின்ற லக்ஷ்மிதேவியானவள் தம் மனங்குளிர்ந்தனள். செம்மையாகிய தயிர் பால் பழம் தேன் சர்க்கரை முதலியவைகளினால் அபிஷேகஞ் செய்து கஸ்தூரி சந்தனக் குழம்போடு சாற்றி வண்டுகளெல்லாம் நெருங்கி இராநின்ற மிகுந்த வாசனையையுடைய அநேகவிதமான புஷ்பமாலையைச் சாத்தி அச்சிவலிங்கப்பெருமானைப் பலநாள் பூசனைபுரிந்து அவ்விடத்தே வாசம் பொருந்திய தாமரை மலரிலிராநின்ற லக்ஷ்மிதேவியானவள் இருந்து பிறகு சிவபெருமான் உத்தரவு கொடுக்க அழகிய சந்நிதானத்தில் துதித்து நின்று குற்றம் நீங்கிய தமது தாமரை மலராகிய வீட்டினை அடைந்திருந்தனள். இவ்வாறு வாசனை பொருந்திய தாமரை மலரில் வசிக்கின்ற லக்ஷ்மிதேவிக்குக் கொடுத்த வரப்பிரகாரம் எக்காலமும் நீங்காமல் எமது தலைவராகிய சிவபிரான் வெள்ளிமலைநாதரென்று போற்றும்படியாக எழுந்தருளி இருந்து மிகுந்த ஆசையினால் சன்னிதானத்திற்கு வந்து வணங்கும்படியானவர்களுக்கெல்லாம் இம்மையில் குறைவில்லாச் செல்வத்தையும் மறுமையில் சிவலோக வாழ்வினையுங் கொடுத்து காப்பாற்றுகின்றார். யாதானுமொரு காரியத்தின்பொருட்டாக இத்தலத்தில் வந்து ஒரு கணப்போதிருந்தவரானாலும் அவ்வெள்ளிமலைநாதருடைய பெயரை தூரத்திலிருந்து மனதிற் பதியும்படியாக நினைந்தவரேயானாலும் கோபுரத்தைப்பார்த்து விரைந்து வணங்கினவரானாலும் சிவபெருமான் வாழும்படியான சிவலோகத்தை அடைந்து எக்காலத்தும் வாழ்வார்கள். லக்ஷ்மிதேவியானவள் பூஜித்த ஸ்தலமானபடியால் வளப்பமே பொருந்திய இத்தலத்தில் வாசஞ்செய்வோர்களுக்கும் நல்லமனமானது குளிரும்படியாக அவ்வெள்ளிமலைநாதருடைய திருவடியைத் துதிக்கின்றவர்களுக்கும் எக்காலத்தும் அளவில்லாத பெருஞ்செல்வங்களும் வந்து சேரும். ஆயுசும் விர்த்தியாகும். தலைவராகிய வெள்ளிமலைநாதருடைய திருவடித்தாமரைகளைக் காயாம்பூ நிறத்தினையுடைய மகாவிஷ்ணுவின் மனைவியாகிய மகாலக்ஷ்மி பூஜித்த மிகுந்த மான்மியத்தைக் கேட்பவர்களும் மனமகிழ்ந்து கற்பவர்களும் எக்காலத்திலும் பெரிய செல்வத்தினை அடைந்து மறுமையில் பிரமா

விஷ்ணு முதலியதேவர்கட்கும் கிடைத்தற்கரிய சிவலோகத்தில் வாழ்வார்கள். இது சத்தியமென்று சூதமகாமுனிவர் திருவாய்மலர்ந்தருள முனிவர்களெல்லாம் இனிமையாக சந்தோஷித்து மனங்குளிர்ந்தோமென்று உபசாரஞ்சொல்லி வெள்ளியங்கிரியில் வந்து சிவபெருமான் சுயம்புவடிவாய்த் தோன்றும் இவ்விலிங்கத்தினை முன்னே பெரிய பூசனை செய்தோர்களது முறைமையையும் திருவாய்மலர்ந்தருளுமென்று கேட்கச் சொல்லுகின்றார். இத்திருத்தேங்கூரே கைலாஸமாகும் இதின் எல்லை கைலாயத்தெல்லையாகும் இவ்வூரில் வாழ்கின்றவர்களே தேவர்களாவார்கள். ஆகையால் இவ்வூருக்கு எவ்வூரும் ஒவ்வாது. இவ்வூரில் உயர்ந்த சுக்கிரபகவான் வந்து பூஜித்து செவ்வானம்போல் மேனியினையுடைய சிவபெருமானருளைச் சேர்ந்த சரித்திரத்தைச் சொல்லுகின்றோம்.

வெள்ளிமலைச்சருக்கம் முற்றிற்று.

---

## 4. சுக்கிரபகவான் பூஜைசெய்த சருக்கம்.

முன் ஒருகாலத்தில் வலிமை மிகுந்த அசுரர்களுக்கெல்லாம் தலைவனாகி, விளங்குகின்ற ஆயுதத்தையுடைய மாவலிச்சக்கிரவர்த்தி என்று சொல்லும்படி உலகத்தை ஆண்ட அசுரராஜனானவன் யுத்தத்தில் ஆயுதங்களைப்பிரயோகித்துத் துன்பப்படும்படியாக தேவருடைய இருப்பிடமாகிய சொர்க்கம் முதலிய உலகங்களைக் கப்பமாக அபகரித்துக் கொண்டனன். அக்காலத்தில் இந்திரன் முதலிய தேவர்களும் அஷ்டதிக்குப்பாலகர்களும் மனம்வருந்தி தங்களுடைய நாடு நகரம் முதலியசெல்வங்களை எல்லாம் விட்டுவிட்டு சத்தியலோகத்திற்கு வந்து தாமரைமலரில் வாசஞ்செய்யாநின்ற பிரம்மதேவரை வணங்கி அசுரராஜனாகிய மாவலிச்சக்கரவர்த்தியானவன் எக்காலத்திலும் உண்டாக்கும்படியான இடுக்கண்களைச் சொல்லி வருந்தினார். உடனே வண்டுகள் மொய்க்கும்படியான தேனொடுகட்டவிழ்ந்த பொகுட்டினையுடைய மணம்பொருந்திய தாமரை மலரில் வசிக்கின்ற பிர்மதேவரானவர் பயப்படாநின்ற இந்திரன் முதலிய தேவர்களோடும் உலகத்தினைப்படைக்



தம் அழகினையுடைய திருஉந்திக்கமலம் பொருந்திய கேசவமூர்த்தியாகிய விஷ்ணுபகவான் அருமையான அறிதுயில் செய்யாநின்ற திருப்பாற்கடலையடைந்து மலர்ந்த சிவந்த தாமரைகளையுடைய நீலமலைக்குச்சமானமாகிய திருமேனியையுடைய விஷ்ணுமூர்த்தியினுடைய திருவடியை வணங்கித் தோத்திரஞ்செய்து நின்றுகொண்டு மாவலிச்சக்கரவர்த்தியென்ற அசுரனாற் செய்யப்பட்ட துன்பவசப்பட்டோம். அபயம் அபயமென்று முறையிட்டனர். அதற்கு யுத்தத்திற்பகை கெடும்படி கொல்லுகின்ற வளப்பத்தினையுடைய சக்கிராயுதத்தையுடைய விஷ்ணுமூர்த்தியானவர், பயப்படாதீர் பயப்படாதீர் என்று அன்புடனே அபயங்கொடுத்து பொல்லாத வஞ்சகத்தைச் செய்கின்ற மாவலியை அடைந்து அவனுடைய வல்லமையை அடக்க உயர்ந்த திதியினுடையபுத்திரனென்று சொல்லும்படி வருகின்றோம் என்று திருவாய்மலர்ந்தருளினர். அவ்வாறு அநுக்கிரகஞ்செய்த விஷ்ணுமூர்த்தியை விரும்பி பிர்மா முதலிய தேவர்கள் வழிபாடுசெய்து வணங்கி விடைபெற்றுக்கொண்டு தங்கள் தங்கள் இருக்கைபோய்ச் சேர்ந்தார்கள். பிறகு மேகம்போல் விளங்காநின்ற திருமேனியையுடைய விஷ்ணுமூர்த்தியானவர் பரிசுத்தமாகிய ஒப்பற்ற திதி என்னும் பெண்ணினது அழகிய வயிற்றில் பொருந்திய சிறிய வலிய குள்ளமேனியோடு பிறந்து முஞ்சுப்புல் நாணும் பூணூலும் அழகுபொருந்திய சிகையும் தாழவும் மேலாகிய சிறிய மான்தோல் சரீரத்தில் ஒளிவிளங்கவும் மனதில் மறவாது மந்திரம்பொருந்திய வேதத்தை ஜெபித்துக்கொண்டு வஞ்சவுருவாகக்கொண்ட வாமனரூபத்தோடும் உலகினை ஆளும்படியான அசுரனாகிய மாவலிச்சக்கரவர்த்தி விண்ணவர்களெல்லாம் நடுங்கும்படியாக ஒரு ஒப்பற்ற யாகத்தை பிராமணர்களோடு செய்கின்றகாலத்துச் சென்றார். அவ்வாறு பூமி எல்லாம் விளங்கும்படி வந்த ஒப்பற்ற விஷ்ணுமூர்த்தியினுடைய வாமனரூபத்தை இரண்டு கண்களுங்களிக்கும்படி நேரில் பார்த்து திருவடிகளை வணங்கி, அடியேனுடைய தவப்பயனால் இவ்விடத்தில் வந்தருளினீர். தேவரீருடைய விருப்பத்தினைத் திருவுளம் மகிழ்ந்து இனிதாகச் சொல்லியருளவேண்டுமென்று கேட்க வந்தருளிய குள்ளமேனியினையுடைய விஷ்ணுமூர்த்தியானவர் மனமகிழ்ந்து முதன்மையாகிய நன்மையோடு மூன்றடி மண் நீயே கொடுத்

தருள்வாயென்று திருவாய்மலர்ந்தருளினார். இவ்வாறு வாமனமூர்த்தியானவருரைக்க பெருமை பொருந்திய மாவலிச்சக்கரவர்த்தி மகிழ்ந்து ஆரும்படியான இம்மூன்றடி மண்ணையும் நன்மையாகக் கொடுப்பேனென்று சொன்னமாத்திரத்தில் பயங்கரம்பொருந்திய விஷ்ணுமூர்த்தியினுடைய கபடமாகிய வேஷம் இவ்வாமன ரூபமாகையால் நீ கொடாதேயென்று மாவலிச்சக்கிரவர்த்தியை மந்திரியாகிய கொடிய சுக்கிரபகவான் தடுத்தான். அப்படித் தடுத்தும் அசுரனாகிய மாவலிச்சக்கரவர்த்தி தனது குருவாகிய சுக்கிரபகவானைப் பார்த்து உலகத்தினையுண்டு வயிற்றில் வைத்து வளர்க்கும்படியான பெருமைபொருந்திய மாயன் வஞ்சனையோடு வந்தால் உண்மையாகிய வடிவத்தைக்கண்டு கொடுக்கும்படியான தானம் கொடியதென்று சொல்லுமோ. இதைப்பார்க்கிலும் மேலான தருமமு மிருக்கின்றதோ! இல்லை. சந்தேகமில்லாமல் யாது வந்தாலும் கொடுப்பேனென்று சொல்லி சம்மதித்து தன்னுடைய மனையாளைப் பார்த்து மணம்பொருந்திய ஜலத்தினை தானம் செய்வதற்காக விடுவாயென்று சொல்ல, உடனே போய் கமண்டலத்தினுடைய ஜலம் ஒழுகும்படி துவாரத்தினை, திகைக்கும்படி வண்டு ரூபம் எடுத்து நிலைபெற்ற அசுரர்களுடைய பெயரை உலகத்தில் நிலைநிறுத்தாநின்ற சுக்கிரபகவான் அடைத்தான். இவ்வாறு அடைத்ததை விஷ்ணுமூர்த்தியானவர் உணர்ந்து இது சுக்கிரனுடைய வஞ்சனையென்று ஞான திர்ஷ்டியாலுணர்ந்து மேலே ஒரு தருப்பையை எடுத்து மிருதுவாகிய கமண்டலத்தினின்றும் நன்னீர் வரும்படியான துவாரத்தில் விட்டு சுற்றும்பொழுது சுக்கிரன் தன்னுடைய ஒரு கண் சேதமுறல் கண்டு இம்மென எழுந்து வெளியில் வந்து திசைகளில் புகுந்து மறைந்தனன். நிரம்ப விசுவாசமுடையவர்கள்போல் பக்கத்திலிருந்து அரசர்கள் கொடுக்கின்றவைகளைக் கொடாதபடி பலகாலுந் தடுத்துச் சொல்கின்றவர்கள் பெறும் பெரிய பிரயோஜன மிதுதானென்று யாவருமறியும்படி வாமனரூபங்கொண்டு வந்த முராசுரனைக் கொன்ற மகாவிஷ்ணுவானவர் சுக்கிரபகவானுடைய ஒரு கண்ணினைக்கொடுத்தனர். அஃதுணர்ந்து, சுக்கிரனும் தன் குற்றத்தை யுணர்ந்து வெட்கமுற்று ஒதுங்கிச் சென்றுவிட்டான். அன்று முதலாக மனத்தில் அச்சத்தையுடையவராகி பறந்த காடுகள் முதலிய இடங்களிற் சென்று ஒளிந்திருந்து சிலகாலம் போக வெற்றியைத்தரும்படியான மகாவிஷ்ணுவினுடைய பகையானது விளங்கும்படியான சிவபூஜையை இப்பொழுது செய்தால் நீங்குமென்று சுக்கிரபகவான் நினைத்து திருத்தேங்கூரினையடைந்து நமது பிதாவாகிய சிவபிரான் நமது அன்பினை அறிந்து அருள்செய்வதற்கு இத்தலந்தானென்று மனதில் மிகவும் மதித்துச் சொல்லுகின்றார். இத்தலத்தில் இன்னும் அநேககோடி உத்தமமான ஸ்தலங்களிருக்கின்றன. அத்தலங்களெல்லாம் இத்தலத்தைப்போல் ஆச்சரியத்தை யுடையதாகுமோ! மகாவிஷ்ணு இருக்கின்ற வைகுண்டம் சந்திரமண்டலம் பூலோகம் முதலிய எவ்விடங்களிலும் சென்று நிறைந்த ஊழிகாலத்து வெள்ளம் இத்தலத்தின்மீது வரப் பயந்து பக்கத்தில் ஒதுங்கி நின்றதென்றால் பரிசுத்தம் பொருந்திய இத்தலத்திற்குச் சமானமாகிய தலமுமிருக்கின்றதோ மோதும்படியான அலைகளையுடைய சமுத்திரத்தாற் சூழப்பட்ட இப்பூலோகத்தில் இனித்தேடிப்பார்த்தால் பெருமையிற் சிறந்தவராகிய எம்மையாளுகின்ற உமாதேவியினை இடதுபாகத்திலுடைய சிவபெருமான் தேனினையுடைய மலர்ந்த தாமரைப்புஷ்பத்தில் எழுந்தருளியிராநின்ற லக்ஷ்மிதேவியானவள் வணங்கும்படி வந்து வெள்ளிமலைமேல் எழுந்தருளியிராநின்ற இத்தலத்தைப்போல் வேறு தலமும் இருக்கின்றதோ வென்று மனதில் ஆராய்ந்து உயர்ந்த மற்ற எட்டுக் கிரகங்களோடும் நிலைபெற்ற இத்தலத்தில் வந்து வெள்ளிமலைநாதரைப் பூஜைசெய்து சொல்லும்படியான ஸ்தோத்திரஞ்செய்து திருவடிகளை வணங்கி அன்பினால் உருகுதலையுணர்ந்து மின்னல்போல் விளங்கும்படியான உமாதேவியாரோடும் வெள்ளை நிறத்தினையுடைய விருஷப வாகனத்தின்மேல் எழுந்தருளி காக்ஷிகொடுத்தருளினார். உடனே சுக்கிரனானவன் மற்ற கிரகங்களோடு எழுந்து மகிழ்ந்து அன்பினாற் கசிந்து ஆச்சரியத்தைக்கொண்டு தோத்திரஞ்செய்து மனங்குளிர்ந்தனன். பரமசிவனும் கிருபைகூர்ந்து விஷ்ணுவினுடைய பகையினை நீக்கியருளினோம். உமக்குத்தேவர்கள் புகழும்படியான ஸ்நேகத்தையுடையவனானோம். இன்னும் இத்தலத்தில் வந்து உங்களை வழிபாடு செய்தவர்கள் நிலைபெற்ற இப்பூமியின்மேல் மனம் வருந்தாது பல செல்வங்களையு மடைந்து வாழ்வார்கள். எப்பொழுதும் நம்முடைய கிருபையை அவர்களுக்குத் தந்தோம் என்று திருவாய் மலர்ந்தருளி நமது தந்தையாகிய சிவபெருமான் அவ்விலிங்கத்திற் கலந்தருளினார். பிறகு அவ்வொன்பது கிரகங்களும் தங்கள் தங்

கள் பேரினால் ஒவ்வொரு லிங்கம் பிரதிஷ்டித்து பூஜித்து அவ்வாறு ஆயிரம் வருஷம்வரையிலும் அவ்வுத்தம லிங்கங்களை பக்தியோடு விரும்பி பூஜைசெய்து பிறகும் சுக்கிரன் முதலிய ஒன்பதின்மர்களும் அப்பரிசுத்தமாகிய ஸ்தலத்திலுள்ள மிகவும் மேன்மையாகிய வெள்ளிமலைநாதரை விடாது ஒழுக்கத்தோடு பூஜித்துத் தகுந்த வரன்களை யடைந்து திருவருளைப்பெற்று உத்தரவு பெற்றுக்கொண்டு தங்கள் தங்களுடைய உலகங்களில் சந்தோஷமாய்ச் சென்றிருந்தார்கள். சுடும்படியான வடவாமுகாக்கினியும் அவியும்படியாகக் கரையினைக்கடந்துவரும்படியான பெரிய பிரளய வெள்ளமானது விருப்பத்தோடு சூழ்ந்து அகன்று நிற்றலினாலும் நமது தலைவராகிய சிவபெருமான் பொருந்திய காந்தியினையுடைய வெள்ளிமலையின்மீது எழுந்தருளியிருத்தலினாலும் இத்தலத்தினுடைய எல்லை பரிசுத்தமாகிய கைலாயகிரிக்குச் சமானமானதென்று சொல்லப்படும். ஆகையினால் இவ்வூரை அடைந்தவர்கள் யாவருக்கும் பெரிய வெள்ளமுதல் கொடிய பகைகளுமில்லை. தாமரையிலெழுந்தருளி இராநின்ற லக்ஷ்மிதேவியானவள் வந்துசேர்வாள். உயர்ந்த செல்வத்தையும் துன்பத்தையுங் கொடுக்கும்படியான கிரகங்களெல்லாம் எக்காலத்தும் நன்மையே கொடுக்கும். பரமசிவனானவர் இப்புராணத்தைக் கற்றவர்களுக்கும் தேவர்கள் துதிக்கும்படியான இக்கதையைக் கேட்டவர்களுக்கும் பெருமையிற் சிறந்த இத்தலம் நல்லதென்று வசிப்பவர்களுக்கும் நினைக்கும்படியான பதினொன்றாமிடம் பலனாகக் கொடுத்தருளுகின்றார். என்று யாவற்றையுமுணர்ந்து மனதில் சந்தோஷத்தைக் கொண்ட சூதமுனிவர் திருவாய் மலர்ந்தருளினார். மகா தவத்தையுடைய முனிவர்களெல்லாம் சரீரமானது புளகங் கொள்ளும்படியாக அநேக நூறுகோடி தவங்களை வருத்தத்தோடு செய்த பலனும் இதற்குச் சமானமில்லை யென்று துதித்து இன்னம் இத்தலத்தினுடைய பெருமையைத் திருவாய்மலர்ந்தளவேண்டுமென்று கேட்க சூதமுனிவரானவர் முற்காலத்தில் ஒரு சிறுவன் இந்தத் தலத்திலுள்ள வெள்ளிமலைநாதருடைய செந்தாமரை மலர்போன்ற திருவடியைப் பூஜித்துப் பணிந்து அரசனான சரித்திரத்தை நெருங்கிய அம்முனிவரோடுஞ் சொல்லுகின்றார்.

சுக்கிரபகவான் பூஜைசெய் சருக்கம் முற்றிற்று.



## 5. அரிந்தமன் சருக்கம்.

சுக்கிரன் முதலாகிய நவக்கிரகங்களால் மனதிற் பொருந்திய அன்பினால் கோவிலைச்சுற்றிக் கெடுதலில்லாமல் பிரதிஷ்டித்து பூஜிக்கப்பட்டனவாயும் தங்களைத் தனித்தனியாக வணங்கும்படி வந்தபேர்களுக்கு வேண்டிய வரன்களைக் கொடுப்பனவாயும் விரும்பப்பட்ட நட்பினையுடைய நவக்கிரகங்களின் பெயரைக்கொண்டனவாயுமுள்ள சிவலிங்கங்களை எக்காலத்திலும் வணங்கி கீழ்மையுள்ள பாவமாகிய சமுத்திரத்தை நீங்கி அன்பினாலே உயர்ந்த மோக்ஷமாகிய கரையை யடைந்து உய்ந்தபேர்களுக்குள் ஒருவனுடைய கதையைச் சொல்லுகின்றார்:—ஆகாயம் முழுதும் நிறைந்த அகிற்கட்டைகளினுடைய புகையானது மேகத்தினாற் பெய்யப்பட்ட கொழுத்த மழை ஜலத்தோடு பொருந்தி எவ்விடத்திலும் வாசனை வீசுகின்ற பெருத்த வனங்களையுடைய எட்டுத்திக்குகளுக்குள்ளும் இனிமையாயுள்ளது அங்கதேயம் அந்த அங்கதேசத்துக்கு அரசன் சோதன் என்று எந்த நாட்டிலுள்ளவர்களாலும் சொல்லப்பட்ட மேன்மையுடையவன். முன் ஜன்மத்திலே செய்யப்பட்ட புண்ணியவசத்தினாலே முறை முறையாக மற்ற தேசத்தரசர்களெல்லாரும் வந்து வணங்கும்படியாக மனுவில் விதித்தபடி உலகத்தை அரசாண்டுகொண்டு வந்தான். வளர்ந்து குங்குமச்சேற்றில் மூழ்கி இடையானது தளர்ந்து வருந்தும்படி பெருத்து கனத்தோடு குளிர்ச்சியான கொங்கைகளையுடைய மங்கையர்களைப் பாணிக்கிரகணஞ் செய்து அவர்களோடுகூடி இல்லறத்தை நடத்திக்கொண்டு வருகின்றகாலத்தில் அவனுக்குப் பிரியமாயுள்ள ஒரு பெண்ணினிடத்தில் கருப்பமடைதலுங் கண்டு மகிழ்ச்சியுடையவனாயிருக்க அப்பெண்ணானவள் இரண்டு மலை யென்று சொல்லும்படியான ஸ்தனங்களும் பொலிவாகிய கண்கள் கறுப்பை யடையும்படி மூன்றாம்பிறைச் சந்திரனைப்போல் ஒரு குழந்தையைப் பெற்றனள். உடனே அவ்வரசன் மனம் மிக மகிழ்ந்து இந்திரனுடைய புரோகிதராகிய வியாழபகவானைப் போன்ற தங்கள் குலபுரோகிதரை அழைத்து அவரோடு தன்னுடைய புத்திரனது ஜாதகபலத்தைச் சொல்லும்படி துன்பம் நீங்கும்படி கேட்டனன். அவ்வரசன் புத்தி

னது வருஷம், மாதம், கிழமை, ஓரை, நக்ஷத்திரம், திதி என்று சொல்லும்படியான பலவற்றையும் ஆராய்ந்து அறிந்தே இக்குழந்தையினால் நாடும் அரசனுடைய செல்வங்களுங் கெடுமென்று அக்குழந்தையினது விதியை நொந்து சோர்வடைந்து அவ்வேதியர் அவ்வரசனோடு சொல்வதற்குப் பயந்து நின்று ஒருவாறு தெளிந்து அவ்வரசனோடு குழந்தை பிறந்த நாள் கெடுதியாய் இருக்கின்றது ஆகையால் பொருந்திய காட்டிலே கொண்டுபோய் விட்டுவிடுவது நன்று என்று சொன்னார். அதைக் கேட்டு அவ்வரசன் தன் பெண்சாதியோடு வருந்தி நின்று துன்பத்தைச் செய்வது இக்குழந்தையினுடைய விதியோ வென்று புரோகிதர் சொன்னபிரகாரம் அக்குழந்தையை ஓர் கானகத்திற் கொண்டுபோய் விட்டுவிட்டுத்தளர்ந்து மெலிந்தவனாய்ப் போய் விட்டான். அக்காலத்தில் ஞானமாகிய நல்ல மார்க்கத்தினை நிலை நிறுத்திய கௌசிகராகிய விசுவாமித்திரருடைய சிஷியர்கள் அக்காட்டினிடத்தில் இலை, காய், கனிகள் கொண்டுவர விரும்பிப் போன காலத்தில் அப்புதல்வனைக் கண்டார்கள். அக்குழந்தை பொருந்திய இளஞ்சூரியனைப்போல் சரீரத்தினால் தரையில் புரண்டு காலிலுள்ள பெருவிரலை நாவினால் சுவைத்துக் கொடிய பசியினால் அயர்ந்து மெலிகின்றதை ஆச்சரியத்துடன் பார்த்து விருப்பத்தை யடைந்து என்னகாரணத்தினால் இக்குழந்தையை ஆதரிக்கும்படியான தாயுந் தந்தையு மில்லாமல் இருக்கின்றனர் இந்தப் புதுமை என்ன வென்று சொல்லி மற்ற சாஸ்திரம் வாசிக்கும்படியான சிஷியர்களோடும் எடுத்துக்கொண்டு ஓடித் தங்கள் ஆசாரியராகிய விசுவாமித்திர முனிவரைப் பார்த்து சுவாமி, நாங்கள் எப்பொழுதும் போகும்படியான குளிர்ச்சி பொருந்திய மலர்களையுடைய காட்டினிடத்தில் யாங்கள் இன்று கண்டதாகிய ஒரு புதல்வன் தந்தை தாய் இல்லாமல் ஓரிடத்தில் தனியாய்க் கிடைத்தலைப் பார்த்து எடுத்துக்கொண்டு வந்தோம் என்று சொன்னார்கள். அக்குழந்தையை அவ்விசுவாமித்திர முனிவரானவர் மிகுந்த ஆச்சரியத்தோடு பார்த்து மனதில் அன்பு பொருந்தி தம்மிடத்து வளர்த்து வந்தார் அப்புதல்வன் மூன்றாம்பிறைச் சந்திரனைப்போல் மேன்மேலும் வளர்ந்து அம்முனிவர் அருளைப்பெற்று இகழ்தற்கு அரிதாகிய சாஸ்திரங்கள் யாவும் பத்து வயதுக்குள் கற்று ஆகாயத்திலுள்ள



147859

மேகத்திலுண்டாகும்படியான மின்னலைப்போல் அழகினையடைந்து வாழ்கின்ற காலத்தில் தான் முயற்சிசெய்யும்படியான காரியங்கள் முழுதும் அடையாது இவன் மற்றவரிடத்தில் புகுந்து முயற்சித்தாலும் அவ்விடத்தில் ஒருவரும் கிடைக்காமல் வருந்தி மயக்கத்தை யடைய விசுவாமித்திரரானவர் திருத்தமாக ஞானதிருஷ்டியினாலுணர்ந்து கிரகங்கள் பொருத்தமில்லாமல் சேர்ந்ததினால் வந்ததென்று இத்துயர் நீங்கிப் போகும்படியான உபாயம் என்ன வென்று நினைத்து பரமசிவன் எழுந்தருளி இராநின்ற வெள்ளிமலையில் முற்காலத்தில் பரிசுத்தம் பொருந்திய நவக்கிரகங்கள் புஷ்பங்களைக் கொண்டு பூஜை செய்து வந்த சிவலிங்கங்களைப் பூஜித்தால் இவன் பிழைப்பானென்று உயர்ந்த விசுவாமித்திரர் எண்ணினவராகி அப்புதல்வனைப் பார்த்து நீ பிறந்த ஜாதகம் உன் தந்தையிடத்திற் சென்று துன்பத்தைச் செய்கின்றது. நன்மையல்ல ஆகையால் உனக்கு ஓர் உபாயஞ் சொல்லுகின்றேன் கேட்பாய். திருத்தேங்கூரினையடைந்து கங்காதேவியினாலுண்டாக்கப்பட்ட தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்து அன்பினால் பொருந்திய தீவினை எல்லாம் விட்டு நீங்கும்படி வரதராகிய வெள்ளிமலை நாதரையும் நவக்கிரகங்கள் பூஜித்த விளங்கும்படியான சிவலிங்கங்களையும் துதித்து பூஜை செய்வாய் என்று உபதேசித்தார் அவ்வுபதேசத்தைக் கேட்டு விசுவாமித்திர முனிவருடைய பாததாமரைகளை வணங்கி உத்தரவு பெற்றுக்கொண்டு அத்திருத்தேங்கூர் என்னும் ஸ்தலத்தினைத் துதித்துக்கொண்டு அத்தலத்தினை அடுத்திராநின்ற பெரிய பூஞ்சோலையினிடத்துப் போய்ச் சேர்ந்தான். அப்பூஞ்சோலையில் வாவிகள் எவ்விடத்தும் வளராநின்ற தாமரைப் புஷ்பங்களும், செங்கழுநீர்ப்பூக்களும், கரும்புகளும், விளங்கும். அப்பூக்களிலும் கரும்புகளிலும் தேனை உண்ணாநின்ற தேனீக்களும் ஜலங்களுமே நிறைந்திருக்கும். அவ்வாவிகள்தோறும் மலர்களோடுகூடிய பூஞ்சோலைகளினுடைய வாசனையானது மிகுந்திருக்கும். அப்பூஞ்சோலைகளெங்கும் பொருந்தியிராநின்ற லிங்கங்களினது வாசமே மிகுந்திருக்கும். அப்பூஞ்சோலைகளில் இருக்கின்ற மரங்களெல்லாம் மேகத்தைத் தாங்கிக்கொண்டு வாசனையை வீசிக்கொண்டிருக்கும். அவ்வாவிகளிலுள்ள வண்டுகளெல்லாம் காமரம் என்னும் பண்ணைப் பாடிக்கொண்டிருக்கும். சப்தத்தையுடைய மேக

லாபாணத்தைத் தரித்த பெண்கள் விளையாடுகின்ற முத்துமாலைகளின் வரிசையே மிகுந்திருக்கும். அப்பெண்கள் கட்டப்பட்ட கூந்தலிடத்துச் செங்கழுநீர்ப் பூக்களைப் புனைந்துகொள்வார்கள். அப்பெண்களினது கூந்தலே உயர்ந்த மாலைக் காலத்தை ஒத்திருக்கும். அவர்கள் தரித்திராநின்ற பூமாலைகளே தேனானது சிந்தும்படி தளிர்த்துக்கொண்டிருக்கும். பெண்கள் மாந்தளிர்போலுந் தேகத்தை ப்பெற்று பார்த்தவர்களுக்கு அழகைக் கொடுத்து மாலைக்காலத்தில் மயக்கத்தைச் செய்வார்கள். செருந்தி மரங்களும் பாக்கு மரங்களும் நெருங்கிய பூஞ்சோலைகளில் பொருந்திய சந்திரனுடைய களங்கமாகிய துவாரத்தில் நுழைந்து போகின்ற காரணத்தால் விருந்தாக வந்து கூடும் தம் இனங்களுக்கு சுரும்புக் கூட்டங்கள் தாம் உண்ணுநின்ற தேனையும் அமிர்தத்தையும் உண்பிக்கும். இவ்வாறு விளங்காநின்ற வளப்பங்களை யெல்லாம் பார்த்து, அச்சிறுவனும் பெருமை பொருந்திய விசுவாமித்திரமுனிவர் தனக்குக் குற்றம் நீங்கும்படி சொல்லிய உண்மையான வசனத்தால் சமுத்திர வெள்ளமானது பயந்து தங்கும்படியான திருத்தேங்கூரினுடைய அழகிய எல்லையைக்கண்டு நமஸ்காரம் செய்து அவ்வூரினுட் சென்று பெருமைபொருந்திய வெள்ளிமலையில் எழுந்தருளி இராநின்ற வெள்ளிமலைநாதருடைய தேன் பொருந்திய தாமரை மலர்போலும் சிவந்த திருவடிகளை வணங்கி ஞானமானது ஓங்கும்படி நவக்கிரகங்களால் பூஜிக்கப்பட்ட லிங்கங்களெல்லாவற்றையும் வணங்கி மலர்ந்த பூக்களையும் வாசனைபொருந்திய நீரையும் கொண்டு நாள்தோறும் தெரிசித்துத் தேடுதற்கரிய பூஜைசெய்து நேசத்தோடு சகல யோகங்களும் அன்பும் பொருந்தும்படி விரும்பி பலகாலும் வணங்கித் துதித்தனன். நம்முடைய பிதாவும் நமது தலைவனுமாய் நம்மை ஆண்டருளும்படி எழுந்தருளியிராநின்ற வெள்ளிமலைநாதரானவர் அழகிய மார்க்கண்டனென்று சொல்லும்படி தீர்க்காயுளையும் கொடுத்துக் குறைவில்லாத வாழ்வினையும் சகல தருமங்களின் பலத்தையும் கொடுத்தருளினார். இவ்வாறு வெள்ளிமலைநாதர் அநுக்கிரகித்ததைப் பார்த்து நல்லதென்று நவக்கிரகங்களும் வந்து குழந்தையாகிய அச்சிறுவனைப் பார்த்து குழந்தாய் நாங்கள் சொல்வதொன்றைக் கேட்பாயாக. பதினோராமிடத்தில் யாங்கள் நின்ற உண்மையான



பலனை நீ அடைவாயாக என்று அநுக்கிரகஞ் செய்தார்கள். அளவில்லாத கீர்த்தியும் ஆண்மையும் செல்வங்களும் விளங்கவும் மன்னர்கள் இரண்டு புறத்திலும் தொழுதுகொண்டு வரவும் உலகத்தில் தேவேந்திரனுக்குச் சமானமாகவும் காமுகர்களுக்கெல்லாம் திலகனாகவும் விளங்கும் வண்ணம் அழகிய வரத்தினைக் கொடுத்தருளினார். வெற்றிபொருந்திய அச்சிறுவனும் அவர்கள் கொடுத்த நல்ல வரத்தினைப் பெற்று வெள்ளிமலைநாதருடைய தேன்பொருந்திய தாமரைமலர்போன்ற அழகிய இரண்டு திருவடிகளையும் அன்புவைத்து வணங்கி உத்தரவு பெற்றுக்கொண்டு சகல சாஸ்திரங்களையுங் கற்றுணர்ந்த கௌசிகமாமுனிவரிடம் வந்து சேர்ந்தான். கச்சினையணிந்த ஸ்தனங்களையுடைய கன்னியர்களெல்லாம் மன்மதனே என்று புகழும்படியான அழகிய திருமேனியினையுடைய அச்சிறுவனும் கௌசிகமாமுனிவருடைய விரும்புகின்ற பாத தாமரைகளை வணங்கலும் உடனே அம்முனிவர் அவனுடைய உச்சிமோந்து தழுவி விரும்பிச் சொல்லுகின்றார்:— நீ வெள்ளிமலைநாதருடைய திருவடிகளை நேசித்துப் பூசித்து நல்லவரங்களைப்பெற்ற தன்மையை விரைவில் உணர்ந்துகொண்டோம். இந்தப் பெரிய பூமியினை அதில் வசியாநின்ற சகல ஜீவர்களுடைய பாவங்களை நீக்கி உண்டாகிய மேன்மையோடு நீ ஆளுவாய் என்று சொல்லி அரசர்களெல்லாம் புகழும்படியான அரிந்தமன் என்று சொல்லாநின்ற உண்மையாகிய பேரினைக் கொடுத்தோம். உன்னுடைய தந்தைபால் மேன்மை விளங்கும்படி போய் வாழ்வாய் என்று கோசிகன் கொடுத்தருளிய வெற்றி பொருந்திய வில், வேல், கதை, அம்பு முதலியவைகளைப் பெற்று வந்தவுடன் பலவிதமான சைனியங்களினுடைய தூசிகளும் முன்னே செல்ல கோபிக்கின்ற கண்களையுடைய மதயானைகள், குதிரைகள் முதலியன சிறப்புடன் வந்து சூழ்ந்தன. பகைவர்களாகிய மற்ற தேசத்து வேந்தர்களை ஆழம் பொருந்திய சமுத்திரத்திலுள்ள தீவுகளிலும் காடுகளிலும் போகும்படி அனுப்பிவிட்டுப் பகைமைநீங்க எவ்விடத்தும் இருந்துவராநின்ற கப்பங்களைப் பெற்றுக்கொண்டு அந்த அரிந்தமன் அங்கநாட்டைச் சேர்ந்தனன். அளவில்லாத புகழினையுடைய அவ்வரிந்தமன் சொல்லுகின்ற அக்காலத்தில், அன்னியதேசத்து அரசனொருவன் தன் தந்தையாகிய அச்சோதனை நீங்குதலில்லாத அந்நாட்டினை விட்டுத் துரத்தி அந்நாட்டினில் சேனைகளை

ல்லாம் சூழும்படி ஆண்டுகொண்டிருந்தான். அவ்வாறு அந்த அங்க நாட்டை ஜயித்துக்கொண்டு ஆளும்படியான அவ்வேந்தனைத் துரத்தி அந்நாட்டில் எங்கும் தன்னுடைய ஆணையை நிலைநிறுத்தி அவ்விடத்திலிருந்துகொண்டு, தன்னுடைய தந்தையாகிய சோதராஜனை நிலை பெற்ற தூதுவர்களைவிட்டுத் தேடும்படிச் செய்தான். அவ்வாறு அத்தூதுவர்கள் தேடி அச்சோதமகாராஜனைக் கண்டு வணங்கி அழைத்துக்கொண்டு வர அச்சிறுவனாகிய அரிந்தமன் எதிர்சென்று அவனை வணங்கி, நீ என்னுடைய தந்தை, முன்பு காட்டினிடத்தில் தனியே கிடத்திவிட்டுப் போயினையே அந்தக் குற்றம் பொருந்திய மைந்தன் தான் யான் என்றான். வேதம் நாலினை யுணர்ந்த விசுவாமித்திரமுனிவரானவர் அந்த உயர்ந்த பெரிய காட்டினிடத்தில் பார்த்து துன்பம் நீங்கும்படியாக எடுத்து வளர்த்து பிறகு சாதகத்தினைப் பார்த்து அச்சாதகத்தில் நவக்கிரகங்கள் வக்கரித்திராநின்ற குற்றங்களை நோக்கி இரக்கமுற்று பொன்னிநதியினால் சூழப்பட்ட சோழநாட்டில் வாழ்பவர்களெல்லாம் பொருந்தியிராநின்ற வெள்ளிமலைநாதரையும் முற்காலத்தில் நவக்கிரகங்கள் யாவும் பூசித்துத் துன்பத்தினையுந் தீர்த்துக்கொண்ட இலிங்கங்களையும் நீ பூஜைசெய்தால் இந்தக்கோட்களின் குற்றங்களெல்லாம் போமென்று கோசிகமுனிவர் சொல்லிய வார்த்தையின் பிரகாரம் அவ்வெள்ளிமலைநாதரையும் அந்நவக்கிரக லிங்கங்களையும் பூஜித்து வணங்கித் துதிக்கும்படி யான் நல்ல வரங்களெல்லாம் பெற்று இவ்வுலகினை ஆளும்படியான சகல வளப்பங்களும் நிறைந்து இவ்வங்கநாட்டினைச் சேர்ந்தேன் என்றான். இவ்வாறு தனது காதலன் சொல்லிய மொழியினால் மனம் மகிழ்ந்து தனது மார்பினிற் றழுவி சொல்லும்படியான கண்ணீர் விட்டு உச்சிமோந்து சகல வருத்தமும் நீங்கி இன்பமெய்தி இரண்டுபேரும் அந்நாட்டினிடத்து இருந்து தேசங்களெங்கும் செங்கோல் செலுத்தும்படி உண்டாகிய பெரிய வாழ்வினைப் பெற்று தங்களை சகல குற்றங்களினின்றும் நீங்கி உய்யும்வண்ணம் ஆட்கொண்டருளிய வெள்ளிமலைநாதரது பரிசுத்தம் பொருந்திய பாதங்களைத் தொழும்படி மிகுந்த விருப்பத்தையுற்று அவ்விருவர்களும் சகல படைஞர்களோடும் போய்ச் சேர்ந்தார்கள். பெருமை பொருந்திய வெள்ளிமலைநாதர் எழுந்தருளியிராநின்ற திருத்தேங்கூரினுடைய எல்லையை வந்து சேர்ந்து அவ்வெல்லையை வணங்கி நாம் சரீரம் எடுத்



ததினால் அடையும்படியான பிரயோஜனம் இது தானென்று நினைத்து எழும்படியான பெரிய அற்புதத்தோடு வேதங்களில் கூறப்பட்ட எழுநிலைகளோடு கூடிய கோபுரத்தை வணங்கி மயக்கமானது நீங்கும்படியான துவஜஸ்தம்பத்தினது அடியில் வந்து வணங்கி எழுந்து மூன்று கண்களையுடைய யானைமுக விநாயகக்கடவுளை வணங்கி உள்ளே புகுந்து வேலாயுதத்தைத் தரித்த சுப்ரமணியக்கடவுளைத் துதித்து மிகுந்த விருப்பத்தினாலுயர்ந்த கோவிலின் பக்கமாக மூன்றுதரம் வலஞ்செய்து சகலகோடி அகிலாண்டங்களையும் தமது உந்தியந்தாமரையினால் முற்காலத்தில் பெற்றருளிய நாயகியாகிய எங்கள் பெரியநாயகியை வாழ்த்தி அவ்வண்டங்களையெல்லாம் காக்கின்ற வெள்ளிமலைநாதரது திருமுன் எய்தி விரும்பும்படியான வேதத்தில் சொல்லப்பட்ட உபநிடதங்களினால் ஸ்துதிகள் செய்தனர். சந்திரனைத் தரித்த ஜடாபாரத்தைத் தரித்தவனே நமஸ்காரம், கொன்றைப்பூ மாலையைப் பரித்தவனே நமஸ்காரம், பிரகாசம் பொருந்திய அறிவில் விளங்கும்படியான ஞானாக்கினியே நமஸ்காரம், மூன்று கண்களையுடையவனே நமஸ்காரம், தாமரை மலரினால் அர்ச்சனை செய்பவர்களுக்கே வேண்டிய செல்வங்களை அளித்தவனே நமஸ்காரம், பிர்மதேவனும், விஷ்ணுமூர்த்தியும் காணாத புதல்வனே நமஸ்காரம், யானையினுடைய தோலை உடையாகத் தரித்தவனே நமஸ்காரம், விஷம்பொருந்திய மிடற்றினையுடைய அமிர்தமே நமஸ்காரம், விஷ்ணுவைப் பெற்றருளிய செல்வமே நமஸ்காரம், அருமையான வேதார்த்தமாயுள்ளவனே நமஸ்காரம், கோடு பொருந்திய சர்ப்பத்தினைத் தரித்த இடையை யுடையவனே நமஸ்காரம், வளர்கின்ற மானினைத் தரித்த காத்தையுடையவனே நமஸ்காரம், பெரியநாயகியம்மையாரது நல்ல அன்புபொருந்திய பிஞ்ஞகனே நமஸ்காரம், நமஸ்காரம், மெய்யர்களுடைய நெஞ்சத்தில் வசிக்கின்றவனே நமஸ்காரம், நமஸ்காரம், விரும்பி அன்புசெய்வார்கட்கு எளியராய் வருபவனே நமஸ்காரம், சிவந்த மேனியுடையவனே நமஸ்காரம், செழித்த அவைக்குச் சுவையாயுள்ளவனே நமஸ்காரம், பரிசுத்தம் பொருந்திய பெரிய ஜோதிஸ்வரூபனே நமஸ்காரம், அழிவில்லாத பெருமையுள்ளவனே நமஸ்காரம், பூமியிலுள்ளவர்களெல்லாம் புகழும்படியான வெள்ளிமலைநாதரே நமஸ்காரம், நமஸ்காரம் என்று புகழ்ந்து துதித்துப் பலதரம் வணங்கி அவ்வூரிலிருந்து பொன்னினால்

அக்கோவிலைப் புதுக்கி வெள்ளிமலைநாதருக்குப் பொருந்திய நன்னெறியைத் தாநின்ற திருவிழாவை நடத்தும்படி விரும்பி மேன்மையோடு கூடிய சொல்லுதற்கரிய வீதிகள்தோறும் அலங்கரிக்கும்படி பறையறிவித்தார்கள். அவ்வாறே அவ்வூரிலுள்ள ஜனங்களெல்லாம் நக்ஷத்திரத்தை அளாவும்படியான பொன்மயமாயுள்ள மாடங்களைச் சாந்தினால் மெழுகி எவ்விடத்திலும் தோரணங்களும் வாழைகளும் நிறுத்தி தொடர்ந்த பந்தல்களில் பாக்குக்குலைகளைக் கட்டிப் பூரணகும்பங்கள் வைத்து புதிய மலர்மாலைகளைத் தொங்கவிட்டு பூமியிலுள்ளவர்களெல்லாரும் வாழ்த்தும்படி அந்தப் பதியினை அலங்காரஞ் செய்தார்கள். அப்பதியினிடத்து மகாமேருகிரிக்குச் சமானமாகிய உயர்ந்த மதத்தைப் பொழியும்படியான யானையினுடைய கர்ச்சனையும் எவ்விடத்திலும் வெற்றி பொருந்திய பெரிய குதிரைகள் நின்று கர்ச்சிக்கின்ற பெரிய முழக்கமும் வாசனை பொருந்திய விசாலமாகிய ஸ்தனங்களையுடைய மடவார்கள் ஆடாநின்ற மத்தளத்தினது ஓசையும் கூரிய வாரினால் கட்டப்பட்ட வலியபேரிகையினுடைய ஓசையும் சமுத்திரத்தைப்போல் ஒலிக்கும். குங்குமம், பனிநீர், சந்தனம் முதலியவைகளைக்குழைத்து இளமையாகிய ஸ்தனங்களின்மேல் பூசி ஸ்திரீகளின் கூந்தலின்மீது கோடுபொருந்திய மலர்களைச் சூட்டுகின்றவர்களும், பசிய குழை கடகம் தோடு பருத்தமணிகளோடு கூடிய மேகலாபரணம் சிவந்த பொன்னினால் செய்யப்பட்ட சங்கு சிவந்த சிலம்புமுதலானவைகளினால் பெண்களுக்கு அலங்காரம் செய்கின்றவர்களும், நீண்ட கொடிகளை வீதிதோறும் வரிசையாக நிறுத்தி அலங்கரிக்கின்றவர்களும் வெள்ளிமலைநாதருடைய அடியார்களுக்கு அன்பாய் விருந்து செய்து அமுதூட்டுபவர்களும் சித்திர வஸ்திரங்களினால் மேற்கட்டிகட்டுபவர்களும் வாசனையோடுகூடிய ஸ்தனங்களையுடைய மீன் போன்ற ஸ்திரீகள் நடனஞ்செய்யும்படியான சபைகள் தோறும் நாடகங்களை எழுதுகின்றவர்களும் முத்துக்களினால் அலங்கரிக்கின்றவர்களும் முழுத்துகிலினால் விருதுக்கொடி கட்டுகின்றவர்களும் எல்லாவிதங்களினாலும் எவ்விடத்திலும் அலங்காரஞ் செய்ய சித்திரை மாதத்தில் திருவிழா நடத்த விரும்பி உத்தமமான நாளில் நல்ல ஓரையைத் தெரிந்துகொண்டு மிருகசீரிஷபத்துக்கு முதனாளாகிய ரோகணி நக்ஷத்திரத்தில் விரஷபக்கொடி ஏற்றி நம் அம்மையாகிய பெரியநாயகிக்கும்



எங்கள் தலைவராகிய வெள்ளிமலை நாதருக்கும் அஸ்த நக்ஷத்திரத்தில் ரதாரோகண உத்ஸவம் நடத்தி சித்திரா நக்ஷத்திரத்தில் பௌர்ணமி கூடிய நன்னாளில் தீர்த்தோத்ஸவம் செய்தார்கள். இவ்வாறு திருவிழாவும் இனிதாக நடத்தி அவ்வாறே செங்கோலினை நீதியாகப் பூமியில் அலங்காரம் பெறும்படியாக நிறுத்தி வெகுநாள் வாழ்ந்திருந்து மானைத்தரித்த கரத்தினையுடைய சிவபெருமானுடைய நயந்த சாரூபத்தைப் பெற்று அழகினால் முறைமையாகச் சிவலோகம் சேர்ந்து வாழ்ந்திருந்தார்கள். ஆதலால் அத்தலத்தில் புண்ணிய ஸ்தலமென்று வாசஞ்செய்பவர்களுக்கும் எம்பெருமானாகிய வெள்ளிமலை நாதருடைய பாதங்களைப் பூமியில் படும்படி வணங்கின பேருக்கும் அவ்வெள்ளிமலை நாதரைத் தியானித்து ஒரு க்ஷணப்பொழுது இருந்தவர்க்கும் பலராலும் புகழப்பட்ட நவக்கிரகங்கள் யாவும் பதினோராமிடத்திலுள்ள நன்மையைக்கொடுத்துக் காப்பாற்றுவார்கள். எங்கள் நாதராகிய வெள்ளிமலை நாதரும் கருணை செய்தருளுவார். விசுவாமித்திரமுனிவரானவர் கோடாகோடி ஸ்தலங்கள் இருந்தாலும் அச்சிறுவனுடைய நவக்கிரக தோஷத்தாலுண்டாகிய குற்றத்தை நீக்குதற்கு இவ்வூரே வல்லமையுள்ள ஸ்தலமென்று திருவாய்மலர்ந்தருளினமையால், குற்றமற நூறு ஜன்மத்தில் செய்த புண்ணியத்தை உடையவர்களுக்கெல்லாம் மற்றவர்களுக்கு ஆசாரியனை வணங்கவும் தெரிசிக்கவும் முடியாது என்று சூதமகாமுனிவர் கூற, தொழாநின்ற பெருமையுடைய முனிவர்களெல்லாம் அச்சூதமாமுனிவரை வணங்கி ஆதி நாயகராகிய வெள்ளிமலைநாதருடைய மேன்மையாவும் அன்புடனே கேட்டுப் பிழைத்தோம் இனிக் குற்றம் நீங்க கங்காதேவியானவள் வந்து செய்த தவத்தின் வரலாற்றையும் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று கேட்க சூதமாமுனிவரானவர் மிகவும் அன்புடனே அவர்களுக்கு அருள் செய்து சொல்லத்தொடங்கினார்.

அரிந்தமன் சருக்கம் முற்றிற்று.

## சிவகங்கைச் சருக்கம்.

பார்வதிதேவியாருடைய கமலம் போன்ற கரங்களின் விரலினின்றும் அக்காலத்தில் பெருகியவளும் எமது தலைவராகிய சிவபெருமானது சிவந்த ஜடாபாரத்தில் மிகுந்த பாரத்துடனே விளங்கும்படியான

வளும் பகீரதசக்கரவர்த்தியினால் மூன்று பிறப்பினுமுண்டாகும்படியான வினைகளெல்லாம் நீங்கும்வண்ணம் கொண்டுவரப்பட்ட மேன்மையையுடையவளும் கொடிய பாவமாகிய வெப்பத்தினை நீக்குவதற்காக உலகிலுள்ளவர்களெல்லாரும் வந்துமுழுகும்படியான பெருமையுடையவளுமாகிய கங்காதேவியானவள் பூலோகத்திலுள்ள மானிடர்கள் தேவலோகத்திலுள்ள தேவர்கள் யாவரும் எக்காலத்தும் வந்து முழுகுதலினால் அவர்களினின்றும் நீங்கி வரும்படியான கொடிய பாவங்களெல்லாம் நம்மைத் தொடர்ந்து விட்டது இனி அப்பாவங்களை நீக்குதல் அருமை யென்று நினைத்து இப்பூமி யெங்கும் சென்று புண்ணிய தீர்த்தங்களில் முழுகினால் வெகுநாளாக வந்தடைந்த பாவங்களெல்லாம் நீங்கு மென்று நினைத்து எழுந்து மலைகளிலுள்ள தீர்த்தங்களிலும் கடலிலுள்ள தீர்த்தங்களிலும் இன்னும் புவியிலுள்ள அநேக தீர்த்தங்களிலும் சென்று துதித்து முழுகி புண்ணிய ஸ்தலங்களெல்லாவற்றையும் வணங்கிப் பலநாள் அலைந்த பிறகு அறிவினாற் றெரிந்து கொடிய பாவமெல்லாம் ஒழிந்ததென்று மனதில் நினைத்து நல்லகாலமானது வந்து பொருந்த அக்கங்காதேவியானவள் வெள்ளிமலை நாதர் பக்கத்தில் வந்து சேர்ந்தாள். அவ்வாறு வந்த வுடனே மனமானது குளிர்ச்சி அடைந்தது. உரோமமெல்லாம் புளகித்தது. கண்ணினின்றும் ஆனந்தபாஷ்பம் பொழிந்தது அறிவில் ஆனந்தம் உண்டாயது கண்டு என்ன காரணத்தினாலென்று ஆலோசித்து இகழும்படியான கொடிய பாவங்களெல்லாம் அடியேனுக்கு நீங்கி விட்டதென்று நினைத்து மிருதுவாக கங்காதேவியானவள் இனிமையாக வணங்கி எழுந்து மெதுவாக நடந்து சென்று எங்கள் பெருமானாகிய வெள்ளிமலை நாதருடைய கோபுரத்தை வணங்கி பலதடவை கோயிலை வலம் வந்து சுக்கிரன் முதலாகிய நவக்கிரகங்களால் பூஜிக்கப்பட்ட லிங்கங்களை வணங்கிப் பஞ்சாக்ஷரத்தைத் துதித்துச் செபித்துக் கொண்டு அவ்விடத்திலிருந்து வலது பக்கத்தில் உண்டாகும்படியான நீரையுடைய பெரிய வாவி யொன்று உண்டாக்கி அத்தீர்த்தத்தில் கங்கையானவள் சென்று ஸ்நானம் செய்து வெள்ளிமலை நாதருடைய திருவடிகளை வணங்கிக்கொண்டு வந்தனள். இவ்வாறு பரிசுத்தமாகிய கங்காதேவியானவள் காலை மாலை யென்று சொல்லும்படியான இரண்டு பொழுதிலும் வணங்கித் துதித்துக்கொண்டிருக்க வெள்ளி



மலை நாதர் மனமகிழ்ந்து எக்காலத்திலும் யாவரும் உன்னிடத்தில் வந்து முழ்குதலினால் உண்டாகின்ற பாவங்களெல்லாம் உன்னை விட்டு நீங்கிற்று இனி அந்தப் பாவங்களெல்லாம் உன்னை வந்தடையாது உன்னால் உண்டாகப்பட்ட செந்தாமரை மலர்கள் பொருந்திய அத்தீர்த்தத்திலும் இவ்விடத்திலும் எக்காலத்தும் நீங்காது இருப்பாய் என்று ஆக்ஞாபித்தருளினார். அவ்வாறே உயர்ந்த கங்காதேவியானவள் அன்றுமுதல் அந்தத் தீர்த்தத்தின்கண்ணே எழுந்தருளி இருந்து அத்தீர்த்தத்தில் சென்று முழ்கினவர்களுடைய நூறு ஜன்மங்களிற் செய்த பாவங்களையெல்லாம் தீர்த்துப் பெரிய வெற்றி பொருந்திய விருஷபவாஹனத்தையுடைய சிவலோகத்தை யடையும்படியான மேன்மையையுங்கொடுத்து நிறைந்திருப்பதினால் அத்தீர்த்தம் எக்காலத்திலும் சிவகங்கை என்று யாவரும் சொல்லும்படியான பேரோடு பொருந்தி இருந்தது. சகல விரதங்களையும் உணர்ந்து உபநிடதத்தோடு கூடிய வேதமுழுவதையும் அளவிட்டுணர்ந்த கிருபையுடைய கௌதமமுனிவரானவர் தன்னுடைய பெண்சாதியாகிய அகலிகை செய்த பெரிய பாபத்தினாலுண்டாகிய துன்பத்திற்கும் அவ்வகலிகையாகிய மனைவியினிடத்து வந்த இந்திரனுக்குச் சாபமிட்டதினாலுண்டாகிய அஞ்சத்தக்க பாவத்திற்கும் மனமிரங்கி மெய்ஞ்ஞானக்கண் கொடுத்தருளி அவர்களைக் காப்பாற்றி சிஷ்யர்களோடு அழகிய ரதத்தின்மேல் இத்தலத்தில் வந்து சேர்ந்து சதுர்த்தசி திதியில் உயர்ந்த பெருமானாகிய வெள்ளிமலைநாதரது அழகிய திருவடிகளைப் பூமியில் விழுந்து வணங்கிப் புகழ்ந்து ஸ்தோத்தரித்து தேடுதற்கரிய பெரிய கங்கா தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து பூரணையில் நிர்த்தனம் செய்பவராகிய வெள்ளிமலை நாதருடைய திருவடிகளைத் தரிசித்துத் தம்மைப்பற்றிய கொடிய பாதகம் எல்லாவற்றினின்றும் நீங்கினார். அல்லாமலும் இன்னும் அநேக முனிவர்கள் விளங்கும்படியான இச்சிவகங்கையாகிய தீர்த்தத்தில் முழ்கிப் பெற்ற பலத்தினை அளவிட்டுச் சொல்லமுடிவதன்று. பிறகு தர்மர் முதலாகிய பாண்டவர்கள் ஐவரும் மிகுந்த வலிமை பொருந்திய இச்சிவகங்கையில் முழ்கி வெள்ளிமலைநாதருடைய விளக்கம் பொருந்திய திருவடிகளை வணங்கி அழகிய பஞ்சாக்ஷரத்தைச் செபித்த காரணத்தினால் சாதலில்லாத பீஷ்மாசாரியரையும் உண்மையாகிய நூலினை உணர்ந்த துரோணாசாரியரையும் அல்லாமல் கூடிய முறைமையினால் துரியோதனன் முதலிய நூறுபேரையும் கொன்று வெற்றி பெற்று மறுபடியும் அன்பு மிகும்படியான இச்சிவகங்கை

யில் மூழ்கி அவர்கள் யாவரையுங் கொன்ற பாவங்களை யெல்லாம் உடனே விட்டு தேடும்படியான நன்மையைப் பெற்று மறுமையில் சிவலோகத்தையும் பெற்று உயர்ந்தார்கள். மாசி மாதம் பூரணமை திதியோடு பொருந்திய திருவாதிரை நக்ஷத்திரத்தில் உண்டாகின்ற தீர்த்தத்தோடு விளங்காநின்ற சிவகங்கையில் ஸ்நானம் செய்து வெள்ளிமலைநாதருக்கும் ஆசையுடனே உமாதேவியாராகிய பெரியநாயகியம்மையாருக்கும் அபிஷேகம் செய்தால் செய்தவர்களுடைய மகிழ்ச்சி பொருந்திய நூறு குலத்துள்ளோர்களும் சிவலோகத்தை யடைவார்கள். அன்றியும் உத்தராயணம், தக்ஷிணாயணம், சங்கராந்தி, சந்திர சூரியர்களை ராகு கேதுக்கள் தீண்டும்படியான கிரகணகாலம் சொல்லாநின்ற பருவம் அமாவாசை குற்றம் நீங்கும்படியான சிவராத்திரி முதலிய இந்தத் தினங்களில் அலைகள் பொருந்திய இச்சிவகங்கையில் மூழ்கி வெள்ளிமலைநாதரைத் தரிசித்தால் அவ்வாறு தரிசித்தவர்கள் தங்கள் வினையினாலுண்டாகிய பாவங்கள் பலவும் நீங்கிச் சிவலோகத்தில் சென்று வாழ்வார்கள். மலடியாய் உள்ளவள் மூன்று நாள் மூழ்கினால் நல்ல புத்திரரைப்பெறுவாள். வியாதியைக் கொண்டவர்கள் யாவரும் உதயத்தில் மூன்று நாள் மூழ்கினால் அன்னோய் தீர்ந்து பிழைப்பார்கள் விளங்கும்படியான பஞ்சபாதகங்களில் எது செய்தவராயிருந்தாலும் அப்பாவங்கள் விலகும்படி மூன்று நாள் மூழ்கினால் அப்பாவங்களினின்றும் விடுபட்டு சிவலோகத்தைப் பெறுவார்கள். சிவனடியார்களுக்கு ஒரு பொழுது இத்தலத்தில் அமுதளிப்பார்களாகில் அவர்கள் எவ்வளவு பாவங்கள் செய்தவர்களாயிருந்தாலும் அப்பாவங்கள் தீர்ந்துவிடும். இது சத்தியம் உத்தமமாகிய வேதியர்களுக்கு அழகிய பொன்னினை ஒரு திலமளவு கொடுத்தாலும் மனமானது குளிரும்படி நூறு ஜென்மத்தில் செய்த பாவங்களும் நீங்கும். இவ்வூரில் நன்மை பெறும்படி நந்தவனம் வைத்து ஐந்து புஷ்பம் பரமசிவனுக்குச் சாத்தினால் ஐந்து பாதகங்களும் தீர்ந்து விடும். இந்த சிவகங்கை மான்மியத்தைக் கேட்பவர்களும் இனிதென்று துதிப்பவர்களும் மனதிலுள்ள துக்கமெல்லாம் நீங்கி த்தெய்வத்தன்மையுடைய சிவலோகத்தை அடைவார்கள் என்று சொல்லியருளினார்.

சிவகங்கைச் சருக்கம் முற்றிற்று.

---

திருத்தேங்கூர்த் தலபுராண வசனம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

---

G.23
142859